# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/= | இதழ் - 24 | 25.06.2023





பாரம்பரிய எள்ளுப்பாகு உற்பத்தியில் ... 12





இலாபம் தரும் எள்ளு 17






தள்ளிப் போடும் பழக்கத்தைத் தகர்க்க 8 உத்திகள் 23


# செயற்கை நுண்ணறிவுக்காக நடக்கும் உழைப்புச் சுரண்டல்?


தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04




# செயற்கை நுண்ணறிவுக்காக நடக்கும் உழைப்புச் சுரண்டல்?

**- வினோத் ஆறுமுகம் -**

செயற்கை நுண்ணறிவு சார்ந்த சாட் ஜிபிடி, டால்-இ, மிட்-ஜர்னி போன்ற பல மென்பொருள்கள் மக்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. இதை அறிமுகப்படுத்திய நிறுவனங்கள் மக்களிடமிருந்து மாதந்தோறும் கட்டணம் வசூலித்து இலாபம் பார்க்கத் தொடங்கிவிட்டன. ஆனால், இந்தச் செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் வெற்றிகரமாகவும் பாதுகாப்பாகவும் இயங்க, அதற்குப் பின்னால் பல ஆயிரம் பணியாளர்களின் உழைப்பு இருக்கிறது.

அவர்கள் 'தகவல் குறிப்பாளர்கள்' என அழைக்கப்படுகிறார்கள். செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள், தகவல் குறிப்பாளர்களின் உழைப்பைச் சுரண்டித்தான் உருவாக்கப்படுகின்றன என்பது துயரமான உண்மை.

### எப்படி இயங்குகிறது?

செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் தாமாக இயங்குவதில்லை. சாட்ஜிபிடியிடம் ஒரு கேள்வி கேட்டதும் அதற்குச் சரியான பதிலைக் கொடுக்கிறது. இப்படிச் சரியான பதிலைக் கொடுக்கப் பல இலட்சம் தகவல்கள், செய்திகள், குறிப்புகள் கொடுத்து அதைப் பயிற்றுவிக்க வேண்டும். சில குறிப்புகளைக் கொடுத்து செயற்கை நுண்ணறிவைப் படம் வரையப் பணித்தால், அது ஒரு புதிய படத்தை நொடிகளில் வரைந்து கொடுக்கும்.

> "செயற்கை நுண்ணறிவு எல்லா நேரங்களிலும் சரியான விடையை வழங்கிவிடாது. கற்றலில் இருந்து செயற்கை நுண்ணறிவு வழங்கும் விடைகளின் துல்லியத்தைப் பல நேரம் மனிதர்கள் சரிபார்த்து உறுதிசெய்வதில் இருந்தே மென்பொருள்கள் தங்கள் கற்றலை மேம்படுத்திக் கொள்கின்றன."

இந்தச் செயற்பாட்டுக்குப் பின்னால் இருப்பது 'லேபிள்' என்கிற வழிமுறை. அதாவது, அந்தப் படம், அதன் வண்ணங்கள், வடிவங்கள் ஆகியவை பற்றிய குறிப்புகள் அனைத்தும் மனிதர்களால் உள்ளீடு செய்யப்பட்டிருக்கும் - அதாவது, 'லேபிள்' செய்யப்பட்டிருக்கும். 'லேபிள்' செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள இவர்கள்தான் 'தகவல் குறிப்பாளர்கள்' என அழைக்கப்படுகிறார்கள்.

செயற்கை நுண்ணறிவு எல்லா நேரங்களிலும் சரியான விடையை வழங்கிவிடாது. கற்றலில் இருந்து செயற்கை நுண்ணறிவு வழங்கும் விடைகளின் துல்லி

யத்தைப் பல நேரம் மனிதர்கள் சரிபார்த்து உறுதிசெய்வதில் இருந்தே மென்பொருள்கள் தங்கள் கற்றலை மேம்படுத்திக்கொள்கின்றன. இந்த வேலையைச் செய்வதும் 'தகவல் குறிப்பாளர்கள்'தான்.

### மனிதர்களின் முழு உதவி

செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் ஆபத்தான, சட்டத்துக்குப் புறம்பான தகவலைக் கொடுத்தால், அதை நீக்க வேண்டும். உதாரணத்துக்கு, ஒரு வெடிகுண்டை எப்படி உருவாக்க வேண்டும் என சாட்ஜிபிடி-யிடம் ஒருவர் கேட்டால், அது எந்தத் தகவலையும் அவருக்கு வழங்கக் கூடாது. சாட்ஜிபிடி மாதிரியான செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களைப் பயிற்றுவிக்க, பல நேரம் இணையத்தில் இருந்துதான் தகவல்களை எடுத்துக் கொடுப்பார்கள்.

இணையத்தில் 'வெடிகுண்டு செய்வது எப்படி' என்கிற தகவலில் இருந்து, அதைச் சாட்ஜிபிடி-யின் தரவுத் தளத்தில் சேர்த்துவிட்டால், ஒருவேளை யாரேனும் வெடிகுண்டு செய்வதைப் பற்றிக் கேட்டால், சாட்ஜிபிடி பதிலளித்துவிடும். இது சமூகத்துக்கு ஆபத்து சட்டத்துக்குப் புறம்பானதும்கூட. அதனால், இந்த மாதிரியான ஆபத்தான பதில்கள் என்றால், அதை மனிதர்கள் பயிற்றுவிக்கும்போதே ஆபத்துக் குறிப்புகளைக் கொடுத்து இந்தப் பதில்களை நீக்கிவிடுவார்கள்.

இந்தப் பணிகளைச் செய்ய இன்னும் செயற்கை நுண்ணறிவு மென்பொருள் உருவாக்கப்படவில்லை. தகவல் சரிபார்ப்பில் மனிதர்களின் முழு உதவியுடன்தான் செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் சரியாக வேலை செய்கின்றன என்பது கவனத்துக்குரியது.



ஆனால், பல நிறுவனங்கள் இந்தப் பணியாளர்களைக் குறைவான ஊதியம் கொடுத்து சுரண்டுவதை இயல்பானதாக ஆக்கிவிட்டன. இந்தியா, சீனா போன்ற நாடுகளிலும், ஆப்பிரிக்க நாடுகளிலும் உள்ள படித்தவர்கள் மிகக் குறைந்த ஊதியத்துக்கு மிகுந்த அழுத்தம் தரக்கூடிய இந்த வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

பெரும்பாலும் இந்த வேலைகளை வீட்டிலிருந்தபடியே செய்துவிட முடியும். இதனால் வீட்டில் இருக்கும் பெண்கள், படிக்கும் மாணவர்கள், வேலையில்லாப் பட்டதாரிகள் ஆகியோர் இந்த வேலைகளில் அதிகம் ஈடுபட்டுள்ளனர். ஒரு மணி நேர வேலைக்கு, இலங்கை மதிப்பில் சுமார் ரூ.500 முதல் ரூ. 750 வரை கொடுப்பார்கள். ஒரு நாளைக்குக் குறைந்தது 4 முதல் 8 மணி நேரம் வரை பணிசெய்ய வேண்டும். வேலை நேரத்தில் இந்தப் பணிகளை மட்டும்தான் செய்கிறாரா? என்பதை உறுதிப்படுத்தும் மென்பொருள்களை பணியாளரின் கணினியில் நிறுவனங்கள் பொருத்தியிருக்கும்.

நொடிப்பொழுது வீணாகிவிட்டாலும், அதை வைத்து ஊதியத்தில் சில நிமிடங்களைக் கழித்துவிடுவார்கள். ஒருவேளை ஒரு மணி நேரம் மட்டும் வேலைசெய்வதாக இருந்தாலும், இருக்கையில் கட்டி



### குறைந்த கூலி

செயற்கை நுண்ணறிவு பல புதிய வகைப் பணிகளை உருவாக்கியிருப்பது உண்மையில் மகிழ்ச்சிக்குரியதுதான்.

வைத்ததைப் போல் தலையைக்கூட அசைக்காமல் வேலை செய்ய வேண்டும்.

கூகுள், ஃபேஸ்புக், ஓபன்ஏஐ, மைகரோசாஃப்ட், அமேசான், டிக்டாக் எனப் பல நிறுவனங்கள் தங்கள் செயற்கை நுண்ணறிவு மென்பொருளைப் பயிற்றுவிக்க மிகக் குறைந்த கூலியில் உலகம் முழுக்கப் பல்லாயிரம் பேரை இப்படித்தான் சுரண்டுகின்றன. இந்தப் பணியில் அமர்த்தப்படும் நபர்களுக்குப் பல்வேறு உடலியல் பிரச்சினைகளும் உளவியல் சிக்கல்களும் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

### தேவை ஒழுங்குமுறை

செயற்கை நுண்ணறிவு நெறிமுறைகளைப் பற்றி ஆய்வு செய்துவரும் திமினிட் கெபுரு போன்ற அறிஞர்கள், இந்தச் சுரண்டலை எதிர்த்து வலுவாகக் குரல் எழுப்புகிறார்கள். பல்வேறு ஆய்வு அறிக்கைகள் மூலம் கேள்விகளையும் எழுப்புகிறார்கள். செயற்கை நுண்ணறிவு நிறுவனங்களையும் மென்பொருள்களையும் கடுமையான சட்ட வரையறைக்குள் நெறிப்படுத்த வேண்டும் என்பதுதான் பல ஆய்வறிஞர்களின் கோரிக்கை.

ஒருபக்கம் நெறிப்படுத்துவதுடன் மறுபக்கம் இதற்காக உழைப்பில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்குச் சரியான ஊதியம் வழங்குவது அவர்களின் உடல்-உளவியல் நல மேம்பாடு சார்ந்த திட்டங்களை வகுப்பது மிகவும் முக்கியம் என்கிறார்கள்.

"செயற்கை நுண்ணறிவு என்னும் தொழில்நுட்பத்தில் சிக்கல் இல்லை. அதைப் பயன்படுத்தும் முறையில்தான் இருக்கிறது. முறையாகப் பயன்படுத்தினால் மனித குலத்துக்கு அதனால் பல நன்மைகள் விளையும். ஆனால், அந்தத் தொழில்நுட்பத்தைக் கையில் வைத்திருக்கும் பெருநிறுவனங்கள்தான் மிகப்பெரும் ஆபத்து" என்கிறார் சமூகச் செயல்பாட்டாளர் நவோமி க்ளெய்ன்.

செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களைப் பயன்படுத்தப் பல்வேறு மாதக் கட்டணத் திட்டங்களை அறிவித்திருக்கும் இந்த நிறுவனங்கள், அதற்கு முதுகெலும்பாக உழைப்பைத்தரும் பணியாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியத்தைக் கொடுக்க விரும்புவதில்லை. ஒருபக்கம் பயனாளர்களை நெருக்கிக் கட்டணத்தை வசூலிப்பதிலும் மறுபக்கம் தம் பணியாளர்களை நெருக்கி உழைப்பைச் சுரண்டுவதிலும் இந்நிறுவனங்களுக்கு எந்தவிதக் குற்றவுணர்வும் இல்லை.

ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்க நாடுகள் இந்தச் செயற்கை நுண்ணறிவு நிறுவனங்களை முறைப்படுத்தச் சட்டம் இயற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளன. ஆனால், இந்த நிறுவனங்களின் உழைப்பைச் சுரண்டும் நாடுகளில் இந்தியா மிக முக்கியமானது. இந்தச் செயற்கை நுண்ணறிவுப் பணிகளைப் பற்றிய நெறிமுறைகளையும் சட்டப் பாதுகாப்பையும் உருவாக்கியே தீர வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## தனியார் மயமாக்கல்?

அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்கல் என்பது இலங்கை அரசியலில் இப்போது ஒரு பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. நட்டத்தில் இயங்கும் பல நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கை எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தொகுதிக் கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாகச் சிலவற்றைச் செய்துகாட்ட வேண்டிய அவசரத்தில் அரசாங்கம் இருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரம் இந்தளவுக்கு மிகவும் மோசமான நிலைமைக்கு வீழ்ச்சியடைந்து சென்றமைக்குப் பிரதான காரணங்களில் முதலாவது ஊழல்கள். இரண்டாவது, அரச நிறுவனங்கள் திறமையான முறையில் நிர்வகிக்கப்படாமை. அரச நிறுவனங்கள் திறமையாக நிர்வகிக்கப்படாமைக்கு ஊழல்களும் காரணமாக இருந்திருக்கின்றன. இந்த நிலையில்தான் அரசாங்கத்துக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு இப்போது அரச நிறுவனங்கள் சிலவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த முயற்சிகளில் கூட வெளிப்படைத் தன்மையைப் பெரிதாகக்காண முடியவில்லை.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது என்ற பெயரில் தனியாருக்கு விற்பனை செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற அதேவேளையில், இலாபத்தில் இயங்கும் நிறுவனங்கள் சிலவும் கூட விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இதில் பிரதானமாக – சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தை விற்பனை செய்வதற்கான முயற்சிதான் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. ரெலிக்கொம் நிறுவனம் நட்டத்தில் இயங்கவில்லை. கடந்த வருடத்தில் மட்டும் பல கோடி ரூபாக்களை அது வருமானமாக ஈட்டிக்கொடுத்திருக்கின்றது. இவ்வாறு பல கோடி வருமானத்தில் இயங்கும் ஒரு நிறுவனத்தை எதற்காக விற்பனை செய்ய வேண்டும்?

1994 ஆம் ஆண்டில் ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகளில் 35 வீதமானவை ஜப்பானின் நிப்போன் நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்பட்டன. இதனைவிட மலேஷிய நிறுவனம் ஒன்றும் அதிகளவு பங்குகளைக் கொள்வனவு செய்திருந்தது. இந்த நிலையில் அரசாங்கத்திடம் 49.5 வீதமான பங்குகள் மட்டுமே இப்போது உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் இருக்கின்ற பங்குகளையும் விற்பனை செய்வதென்பது ரெலிக்கொம் நிறுவனமே இலங்கை அரசின் கைகளைவிட்டுப் போய்விடக்கூடிய ஆபத்தை வெளிப்படுத்துவதாக – விமர்சிக்கப்படுகின்றது. இது தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தானது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

தனியார்மயமாக்கல்தான் இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்துக்குமான தீர்வல்ல. அதேவேளையில், அதனை விமர்சிக்க முற்படுபவர்கள் ரெலிகொம் நிறுவனத்தைப் புலம்பெயர்ந்த தமிழ் நிறுவனம் ஒன்று கொள்வனவு செய்யலாம் என்ற கருத்தில் இனவாத கண்ணோட்டத்துடன் அதனை பார்ப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



### மரவள்ளிப் பயிர்ச்செய்கை

கடந்த வார தமிழர் பொருண்மியம் வார இதழில் வெளிவந்திருந்த மரவள்ளிப் பயிர்ச்செய்கை குறித்த கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. மரவள்ளியை எவ்வாறு நடவேண்டும். எவ்வாறான மரவள்ளிகள் உள்ளன. நீருற்றுவது எவ்வாறு, அறுவடைக் காலம் என பல விடயங்களும் நன்றாக விளக்கப்பட்டுள்ளது. நாம் தோட்டங்களிலும் வீடுகளிலும் மரவள்ளிச் செய்கையை மேற்கொண்டிருந்தாலும், அதனைச் சரியான முறையில் செய்கை பண்ணுவதற்குத் தேவையான தகவல்களை உங்களுடைய கட்டுரையின் மூலமாகவே அறிந்துகொண்டோம். ஆசிரியருக்கு மிக்க நன்றி.

**முத்துக்குமார் வனஜா - தேவிபுரம், புதுக்குடியிருப்பு.**

●●●

### பண நிர்வாகமும் நாமும்

பலருக்குப் பணத்தை எப்படிக் கையாள்வது என்பது தெரிவதில்லை. அந்தப் பலரில் மெத்தப் படித்தவர்களும் வசதியானவர்களும் உள்ளார்கள். பணத்தை எப்படி நிர்வகிப்பது? என்பது குறித்து தமக்குத் தெரியவில்லை என்பதையே அவர்கள் தெரியாமலிருக்கின்றார்கள் எனக் கடந்த வாரம் வெளியான பண நிர்வாகம் குறித்த கட்டுரையில் எழுத்தாளர் வள்ளியப்பன் குறிப்பிட்டிருப்பது மிகவும் சரியானது. பண நிர்வாகம் தொடர்பில் சரியான ஒரு பார்வையைத் தருவதாக அவர் எழுதிய அந்தக் கட்டுரை உள்ளது. அனைவருக்குமே மிகவும் பயனுள்ள விடயங்களைத் தாங்கியதாக வெளிவந்திருக்கும் அந்தக் கட்டுரை போன்ற விடயங்களைத் தொடர்ந்தும் வெளியிடுங்கள்.

**ராணி சீதாராமன் - வண்ணார்பண்ணை.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட
* ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட

சந்தாத் தொகையை Green media House (Pvt) Ltd என்ற பெயரில், HNB Bank - Jaffna Metro branch - 016010023281 கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

-------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

பெயர் - ------------------------------------------------
முகவரி - ----------------------------------------------
தொலைபேசி இலக்கம் - --------------------------------
சந்தாக் காலம் - ----------------------------------------
செலுத்திய தொகை - ------------------------------------
செலுத்திய திகதி - -------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,53,750 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,67,750 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 180/= |
| பச்சைமிளகாய் | - 550/= |
| தக்காளி | - 250/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 250/= |
| கோவா | - 280/= |
| கரட் | - 300/= |
| பூசணி | - 100/= |
| புடோல் | - 150/= |
| வாழைக்காய் | - 100/= |
| சின்ன வெங்காயம் | - 350/= |
| பெரிய வெங்காயம் | - 130/= |
| பாகற்காய் | - 500/= |
| வெண்டக்காய் | - 280/= |
| கருணைக்கிழங்கு | - 160/= |
| பயற்றங்காய் | - 450/= |
| லீக்ஸ் | - 360/= |
| பீற்றூட் | - 450/= |
| கறிமிளகாய் | - 400/= |
| முருங்கைக்காய் | - 600/= |
| போஞ்சி | - 550/= |
| கத்தரி - தம்புள்ள | - 150/= |



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படவுள்ள சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இது எம்மவர்களுக்கு எந்தளவுக்குப் பயனுள்ளது?

**ப.ரவிவர்மன்**
**கொக்குவில் கிழக்கு**

**பதில் -** இது எம்மவர்களுக்கு நிச்சயமாக பயனுள்ளது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இந்தக் கற்கை நெறி அமைந்திருக்கும் என்பதால் எமது இளைஞர் யுவதிகள் இதனையிட்டு கவனத்திற்கொள்ள வேண்டும். சம்பளம் வேலைத் திறமை, அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் அதிகரிக்கும்.

இந்த ஒரு வருட காலக் கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 28 ஆம் திகதி ஆகும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்த அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து ஒரு வருடகால துறைசார் அனுபவமுடைய யாவரும் இக் கற்றை நெறிக்காக விண்ணப்பிக்கமுடியும் என்றும், விண்ணப்பிக்க விரும்புவபவர்கள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கற்கை நெறியின் இணைப்பாளர் பேராசிரியர் சி.சிவேசன் அறிவித்துள்ளார்.

வெளிநாடு சென்று உழைப்பதைவிட உள்நாட்டின் பெருமைகளையும் எமது விருந்தோம்பல் பண்பாட்டையும் வெளிநாட்டவர்களுக்கு காட்டி உழைக்க விரும்பும் இளைஞர் யுவதிகளுக்கு பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் அரிய வாய்ப்பு இது என நண்பர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். உல்லாசப் பயணத்துறை இலங்கையில் இப்போது மேம்பட்டுவருவதால், கணிசமான சம்பளத்துடன் நல்ல ஹொட்டல்களில் வேலைவாய்ப்புக்கான வாய்ப்புக்களும் உள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சான்றிதமுடன் இலங்கையில் எங்காவது நல்ல ஹொட்டல் ஒன்றில் வேலை எடுக்க முடியும். ஏனெனில் பெரும்பாலான ஹொட்டல்களில் இந்தப் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிறைய உள்ளன. அதேவேளையில், இலங்கையில் ஹொட்டல் ஒன்றில் சில வருடங்கள் பணிபுரிந்தால் அந்த அனுபவத்துடன், மத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமன்றி, நியுசிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கூட வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற எமது இளைஞர்கள் பலர் அங்குள்ள ஹொட்டல்களில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையாக இருப்பது இவ்வாறான சான்றிதழ் ஒன்று இல்லாததுதான். ஆக, எம்மவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மூலமாகக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வது அவசியமானதாகும். அவர்களுக்கும் சமூகத்துக்கும் அது பயனளிப்பதாக அமையும்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 224/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 324/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 220/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 379/= |
| சுவிஸ் பிராங் - | 329/= |
| அமெரிக்க டொலர் - | 298/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 215/= |
| கனடா டொலர் - | 239/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 344/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 235= |
| ஸ்ரோலிங் பவுண் - | 402/= |
| சுவிஸ் பிராங் - | 352/= |
| அமெரிக்க டொலர் - | 314/= |

# உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு அரசிடமுள்ள உபாயம் என்ன?

**‘தேசிய பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான ஒரு தீர்மானம் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதில் அரசாங்கம் தயக்கம் காட்டுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இது தொடர்பான முடிவுகள் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்ற அச்சம் அரசுக்குள்ளது.’**




**பி.பார்த்தீபன்**

“உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் நாட்டில் பல் வேறு தரப்பினர் தவறான தகவல்களைப் பரப்பி வருகின்ற போதிலும் அது தொடர்பில் அரசாங்கம் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை” என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித் தார்.

இந்த நாட்டில் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பது மிகவும் உணர்வுபூர்வ மான விடயம், எனவே அரசாங்கம் இவ்விட யத்தில் மிகவும் பொறுப்புடன் செயற்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட் டிக்காட்டினார்.

இலங்கையின் வங்கி மற்றும் நிதிக் கட்டமைப்பிற்கு எதிர்மறையான விளைவு கள் ஏற்படாத வகையில் மற்றும் ஸ்திரத் தன்மையைப் பேணுவதற்கு உகந்த மிக வும் சிறந்த மறுசீரமைப்பிற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

‘ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரு வழிக்கு’ என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக அமையம் ஏற்பாடு செய்தி ருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவுக்கும் போதே ஷெஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“இது குறித்து அரசாங்கம் இறுதித் தீர் மானம் எடுத்தவுடன், நாடாளுமன்றத்துக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கத் தயாராக உள்ளது. இது மிகவும் உணர்வுபூர்வமான விடயம். இது சந்தை நிலைமையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, இந்த மறுசீரமைப்புப் தொடர்பாகச் சந்தேகங் களை எழுப்பும் அறிக்கைகளை வெளி யிடாமல் இருந்தால் தான் , நமது நிதிச் சந்தையின் ஸ்திரத்தன்மையை நாம் தொடர்ந்து பராமரிக்க முடியும். அதற்கு நாம் அனைவரும் மிகவும் பொறுப்புடன் செயற்படுவது முக்கியம். இந்த விடயங்கள் அனைத்தையும் பற்றி, ஜனாதிபதியின் பிரான்ஸ் விஜயத்தின் பின்னர் குறிப்பாக வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர் பில் சிறந்த புரிதல் ஏற்படும்” என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

உண்மையில், தேசிய பொருளாதாரத் தைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கி யமான ஒரு தீர்மானம் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதில் அர சாங்கம் தயக்கம் காட்டுவதற்குப் பல கார ணங்கள் உள்ளன. இது தொடர்பான முடி வுகள் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்ப டுத்தலாம் என்ற அச்சம் அரசுக்குள்ளது. இரண்டாவதாக இது தொடர்பில் எடுக்கக் கூடிய தீர்மானம் எதுவும் நாட்டின் வங்கிக் கட்டமைப்பைப் பாதிப்பதாக அமையக்கூடாது என்பதில் அரசாங்கம் நிதானமாக இந்த விவகாரத்தைக் கையாள முற்படுகின்றது.

இது தொடர்பாக பொருளாதார ஆய்வா ளரும், கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான எம்.கணேசலிங் கத்திடம் கேட்டபோது, அவர் பின்வரும் தகவல்களைத் தந்தார்.

“இலங்கையில் உள்நாட்டுக் கடன்கள் என்று பார்க்கின்றபோது, சுமார் 42 பில் லியன் அமெரிக்க டொலர் அளவில் இருக் கின்றது. இந்தக் கடன்களை மறுசீரமைக் கின்ற போது சுமார் 30 வீதமான கடன்களை குறைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் அதனுடைய இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றது. இந்த 42 பில்லியனும் எந்த வடிவிலே கடன்களாகப் பெறப்பட்டி ருக்கின்றது என்று பார்த்தால், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணையங்களின் அடிப்படையில் பெறப் பட்டுள்ளது. வங்கிகளிடமிருந்து பெறப்பட்டி ருக்கின்றது. இதனைவிட ஊழியர் சேம இலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி போன்ற வற்றிலிருந்தும் பெறப்பட்டிருக்கின் றது. இதனைவிட மத்திய வங்கி பணத்தை அச்சிட்டுப் பணத்தை கடனாக அரசாங்கத் துக்கு வழங்கியிருக்கின்றது. இதில் மூன்று, நான்கு கூறுகள்தான் முக்கியமான கூறு களாக இருக்கின்றன.

ஊழியர் சேமலாக நிதியம் போன்றன மக்கள் பணம். அரசாங்கம் கடன் மறுசீர மைப்பைச் செய்கின்றபோது இதில் பாதிப்பு ஏற்படுமா? என்ற நியாயமான சந்தேகம் அனைவருக்கும் எழுகின்றது. ஆனால், இது தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது இதில் பாதிப்பு ஏற்படாத வகையில்தான் கடன் மறுசீரமைப்புச் செய்யப்படும் என்று அரச தரப்பில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆனால், இந்தக் கடன் மறுசீரமைப்பை எவ்வாறு செய்யப்போகின்றார்கள் என்ப தற்கான தங்களுடைய வேலைத் திட்டம் என்ன என்பதை அரசாங்கம் இதுவரை யில் வெளிப்படையாகவோ, திட்டவட்ட மாகவோ வெளிப்படுத்தவில்லை. ஆனால், பெறப்பட்ட கடன்களைக் குறைப்பது என் பது, கடன் கொடுத்தவர்கள் இணங்கும் பட்சத் தில் மட்டும்தான் சாத்தியமாகும். வங்கிகள் கடன் வழங்கியுள் ளன, ஈ.பி. எப்., ஈ.ரி.எப். கடன் வழங்கியுள் ளது. மத் திய வங்கி கடன் வழங்கியுள்ளது. எனவே இந்த நிறுவனங்கள் எவ்வாறு இந்தக் கடன்களைக் குறைப்பதற்கு இணங்கப் போகின்றன, அவ்வாறு குறைக்கும் போது ஏற்படப்போகும் பாதிப்புக்களை எவர் மீது கொண்டு சென்று சுமத்தப்போகின் றார்கள் என்பதை இதுவரையில் யாரும் தெரிவிக்க வில்லை. இது தொடர்பான தமது திட்டம் என்ன என்பதை அரசாங்கம் வெளிப் படையாக அறிவிக்கும் வரை ஊகங்கள் தான் பரவலாக இருக்கும்” என்பதுதான் கலாநிதி கணேசமூர்த்தியின் கருத்தாக இருந்தது.

இது தொடர்பாக அரசாங்கம் நிதித்துறை சார்ந்தவர்களுடன் ஆராய்ந்துவருகின்றது. பொதுமக்களைப் பாதிக்காத வகையில் இதனை எவ்வாறு செய்ய முடியும்? என்பது அரசாங்கத்தின் கரிசனைக்குரிய விடய மாக இருக்கலாம். எவ்வாறிருந்தாலும், அது தொடர்பான தமது நிலைப்பாட்டை விரைவில் வெளிப்படுத்த வேண்டிய நிலை அரசுக்குள்ளது.

# வரி விளம்பரம் classified advertisement




## வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுச் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.
தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0770684905

---

## SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.
தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 0777421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...
தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட
0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களை பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கி தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்வது எங்களை அழைக்கவும்
0766996628

-------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளது.
தொடர்புகளுக்கு - 077 6566508.

-------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------

### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்து தரப்படும்.
0775652282

-------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப் படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 773853765

-------------------------------------

### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113





# பூ பூக்கும் ஓசை

> “காடுகளை எடுத்துக்கொள்வோம். சிக்கலான சூழலியல் அமைப்பைக் கொண்டுள்ள காட்டில் பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்றன. அங்குள்ள மரங்கள் விலங்குகளுக்குப் பழங்களைத் தருகின்றன. உறைவிடமாக அமைகின்றன. பழங்களைச் சாப்பிடும் விலங்குகள் அவற்றின் விதைகளைப் பரப்ப உதவுகின்றன. விலங்குகள் உண்ட மிச்சங்கள் இலட்சக்கணக்கான பூச்சிகளுக்கு உணவாகி, மக்கி, அங்குள்ள மண்வளம் செழிக்கிறது.”

**- ந.திருநாவுக்கரசு -**

பூமி உயிர்களுக்குத் தாயகமாக இருக்கிறது. பூமியில் இதுவரை 16 இலட்சம் உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னமும் கூட 80 லட்சம் உயிரினங்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்த உயிரினங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் அதன் சுற்றுப்புறத்தோடு ஒன்றுக்கொன்று உறவாடி வருகின்றன.

சொல்லப்போனால், பூமியைக் காப்பாற்றி வருகின்றன. உலகைக் காப்பாற்ற மனிதர்கள் மட்டும்தான் கடவுள் அவதாரம் எடுக்க வேண்டுமா என்ன? நாம் அற்பமாக நினைக்கும் பூச்சிகள்கூட பூமி ஆரோக்கியமாக இருக்கக் கடும் உழைப்பை நல்குகின்றன. நுண்ணுயிர்கள் நிலங்களை ஊட்டமிக்கதாக மாற்றுவதால்தான் அதில் பயிர்கள் விளைந்து உணவு கிடைக்கிறது. வண்டுகளும் தேனீக்களும் மகரந்தச் சேர்க்கையைச் சாத்தியப்படுத்துவதால் தான் பழங்கள் கிடைக்கின்றன.

**நம்மைச் சுற்றுகிறதா பூமி?**

அசுமந்தியின் உரோமத்தில் வளரக்கூடிய பூஞ்சை ஒன்று, புற்றுநோய்களைக் குணப்படுத்தும் மருந்தாகிறது. மரங்கள் நமக்குச் சுத்தமான காற்றை வழங்குகின்றன. பவளப்பாறைகள் இயற்கை பேரிடர் ஏற்பட்டுக் கடல் நிலத்தை விழுங்காமல் பாதுகாக்கின்றன. இப்படி ஏதோ ஒரு வகையில் உயிரினங்களால் மனிதர்களுக்குப் பயன் இருக்கிறது.

நிற்க, இந்தப் பார்வைதான் தவறானது. நாம் உயிரினங்களையும் பூமியையும் நம்மை மையமாகக் கொண்டே எடைபோடுகிறோம். அதனால் நமக்கு என்ன பயன் என்பதை மட்டும் பார்க்கிறோம். நாமும் இயற்கையின் அங்கம்தான் என்பதை மறந்து விடுகிறோம். ஆனால், இயற்கை நம் சிந்தனையைத் தாண்டிய ஆச்சரியங்களைக் கொண்டது. நமது பூமி சுற்றுச்சூழல், உயிரினங்கள், மரபணுக்கள் ஆகியவற்றின் பன்முகத்தன்மைகளால் பின்னிப் பிணைந்துள்ளது. அதைத்தான் உயிர்ப் பன்மையம் (Bio Diversity) என்கிறோம்.

காடுகளை எடுத்துக்கொள்வோம். சிக்கலான சூழலியல் அமைப்பைக் கொண்டுள்ள காட்டில் பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்றன. அங்குள்ள மரங்கள் விலங்குகளுக்குப் பழங்களைத் தருகின்றன. உறைவிடமாக அமைகின்றன. பழங்களைச் சாப்பிடும் விலங்குகள் அவற்றின் விதைகளைப் பரப்ப உதவுகின்றன. விலங்குகள் உண்ட மிச்சங்கள் இலட்சக்கணக்கான பூச்சிகளுக்கு உணவாகி, மக்கி, அங்குள்ள மண்வளம் செழிக்கிறது. காடுகளையொட்டி ஓடும் ஆறுகளில் இலைகள் விழுவதால் அதிலுள்ள அமிலங்கள் நீரில் வாழும் நுண்ணுயிர்களுக்கு உணவாகின்றன.

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY

ஞாயிற்றுக்கிழமை
25.06.2023



# ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை வளர்ப்பதற்கான ஒரு குறிப்பிடத்தக்க நகர்வாக இலங்கை சமீபத்தில் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. பல ஆண்டுகளாக தேசத்தை ஆட்டிப்படைத்து, அதன் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இடையூறாக இருக்கும் ஊழலின் ஆழமானப் பிரச்சினையைச் சமாளிப்பதை இந்த ஊழல் எதிர்ப்புச் சட்ட மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது. நாட்டின் ஆட்சி மற்றும் சட்ட நிலப்பரப்பை மறுவடிவமைக்கும் ஆற்றலுடன், ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்கும், நல்லாட்சியை மேம்படுத்துவதற்கும், மக்களின் நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கும் வலுவான கட்டமைப்பை உருவாக்க இந்தச் சட்டம் தயாராக உள்ளது.

ஊழல் என்பது இலங்கையில் நீண்டகாலமாக ஒரு பரவலான பிரச்சினையாக இருந்து வருகிறது. இது மக்களின் நம்பிக்கையைச் சிதைத்து நாட்டின் பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. மாற்றத்தின் அவசரத் தேவையை உணர்ந்து இலங்கை அரசாங்கம் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை முன்வைத்து குறிப்பிடத்தக்க ஒரு படியை முன்னெடுத்துள்ளது. இந்தச் சட்டம் முறையான ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கும், நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும், அரசாங்கத்தின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

**ஊழல் என்பது இலங்கையில் நீண்டகாலமாக ஒரு பரவலான பிரச்சினையாக இருந்து வருகிறது. இது மக்களின் நம்பிக்கையைச் சிதைத்து நாட்டின் பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. மாற்றத்தின் அவசரத் தேவையை உணர்ந்து இலங்கை அரசாங்கம் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை முன்வைத்து குறிப்பிடத்தக்க ஒரு படியை முன்னெடுத்துள்ளது.**

பொது நிதியை துஷ்பிரயோகம் செய்தல், இலஞ்சம் மற்றும் பாகுபாடு உட்பட ஊழலில் இருந்து உருவாகும் பல சவால்களை இலங்கை எதிர்கொண்டுள்ளது. இந்த ஊழல் நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது மட்டுமன்றி அரசு நிறுவனங்களின் மீதான மக்களின் நம்பிக்கையையும் சிதைத்துள்ளது. எனவே, ஊழலை வேரறுப்பதற்கும் மிகவும் வெளிப்படையான மற்றும் பொறுப்புணர்வுள்ள சமுதாயத்தை வளர்ப்பதற்கும் ஊழல் ஒழிப்பு மசோதா அறிமுகமானது நாட்டின் முயற்சிகளில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும்.

### ஊழல் எதிர்ப்பு மசோதாவின் முக்கிய அம்சங்கள்

ஊழல் எதிர்ப்பு மசோதா பல்வேறு மட்டங்களில் உள்ள ஊழலைத் தீர்க்க வடிவமைக்கப்பட்ட பல முக்கிய விதிகளை உள்ளடக்கியது. முதலாவதாக, ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கும் விசாரணை செய்வதற்கும் பொறுப்பான ஒரு சுயாதீன ஊழல் எதிர்ப்பு ஆணையத்தை இந்த மசோதா நிறுவுகிறது. இந்த ஆணையம் ஊழல் புகார்களை விசாரிக்கவும், விசாரணை நடத்தவும், சட்ட நடவடிக்கைகளைத் தொடங்கவும் அதிகாரம் பெற்றிருக்கும். ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சுயாதீன அமைப்பை உருவாக்குவதன் மூலம் அரசியல் தலையீடு இல்லாமல் பாரபட்சமற்ற விசாரணைகள் மற்றும் வழக்குகளை உறுதி செய்யும் இந்த மசோதா, ஊழலில் ஈடுபடுபவர்களுக்குக் கடுமையான நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்துகிறது. பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு அஞ்சாமல் ஊழல் நடைமுறைகள் தொடர்பான தகவல்களைத் தெரிவிக்கத் தனிநபர்களை ஊக்குவிக்கிறது. ஊழலின் வேரூன்றிய வலைப்பின்னல்களை அகற்றுவதிலும், ஊழலை அம்பலப்படுத்துபவர்கள் தீங்கிலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதிலும், தகவல் தருபவர்களைப் பாதுகாப்பதன் மூலமும் அவர்களுக்குச் சட்டபூர்வ பாதுகாப்பை வழங்குவதன் மூலமும் ஊழல் புகாரளிக்கத் தனிநபர்களை ஊக்குவிக்கும் ஒரு சூழலை இந்த மசோதா உருவாக்குகிறது, மற்றும் ஊழல்

நடைமுறைகளை வேரறுப்பதில் அதிகாரிகளுடன் ஒத்துழைக்கிறது.

கூடுதலாக, இந்த மசோதா பொது அதிகாரிகளின் சொத்து அறிவிப்பைக் குறிக்கிறது. அவர்கள் தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வெளியிடுவதைக் கட்டாயமாக்குகிறது. இந்தத் தேவை வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவதிலிருந்து பொது ஊழியர்களைத் தடுக்கிறது. சொத்துப்பிரகடனத்தைக்கட்டாயமாக்குவதன் மூலம் பொது அதிகாரிகளிடையே உள்ள விகிதாசாரச் சொத்துக்களின் வழக்குகளை வெளிக்கொணரவும், அநியாயமானச் செறிவூட்டலுக்கு அவர்களைப் பொறுப்பேற்கவும் இந்த மசோதா முயல்கின்றது.

ஊழலை எதிர்த்துப் போராடுவதில் சர்வதேச ஒத்துழைப்பை எளிதாக்க இந்த மசோதா பரஸ்பரச் சட்ட உதவி, மற்றும் சட்டவிரோதமாகச் சம்பாதித்த சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான விதிகளை உள்ளடக்கியது. இவ்வாறான பொறிமுறைகள் ஏனைய நாடுகளுடன் ஒத்துழைத்து வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீளப்பெறும் இலங்கையின் திறனை மேம்படுத்துகிறது. எல்லை தாண்டிய ஊழலை எதிர்ப்பதற்கும், ஊழல் பேர்வழிகள் தஞ்சம் அடையவோ அல்லது வெளிநாட்டு அதிகார வரம்புகளில் அவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளின் வருமானத்தை அனுபவிக்கவோ முடியாது என்பதை உறுதி செய்வதில் சர்வதேச ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

### தாக்கம் மற்றும் விளைவுகள்

ஊழல் எதிர்ப்புச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை இலங்கையின் தற்போதைய ஊழலுக்கு எதிரான நடவடிக்கைளில் ஒரு திருப்புமுனையைக் குறிக்கிறது. வலுவான சட்டக் கட்டமைப்பு மற்றும் நிறுவன வழிமுறைகளை உருவாக்குவதன் மூலம் இந்தச் சட்டம் நாட்டின் நிர்வாகத்திலும் பொருளாதாரத்திலும் தொலைநோக்கு நேர்மறையான மாற்றங்களைக் கொண்டு வரும் திறனைக் கொண்டுள்ளது.

முதலாவதாக, ஊழலைச் சகித்துக் கொள்ள முடியாது குற்றவாளிகள் தங்கள் செயல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்ற வலுவான செய்தியை இந்த மசோதா வெளிப்படுத்துகின்றது. இது அரச நிறுவனங்களில் பொது நம்பிக்கையை மீட்டெடுக்கவும், நிலையான மற்றும் ஊழலற்ற சூழலை நாடும், உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையை மேம்படுத்தவும் உதவும். இது சுத்தமான மற்றும் வெளிப்படையான வணிகச் சூழல் முதலீடுகளை ஈர்க்கின்றது. அத்தோடு பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுகின்றது, மற்றும் இலங்கையின் உலகளாவிய நற்பெயரை மேம்படுத்துகின்றது.




மேலும், ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்துவதிலும், விசாரணைகளை எளிதாக்குவதிலும், தகவல் தருபவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஒருமைப்பாட்டின் கலாச்சாரத்தை கட்டியெழுப்ப அவர்களின் பாதுகாப்பு அவசியம். ஊழல் செய்த நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதை உறுதிசெய்யும் வகையில் தனிநபர்கள் பாதுகாப்பாகவும், ஊழல் புகாரளிப்பதில் ஆதரவாகவும் உணரும் சூழலை உருவாக்க உதவும்.

கட்டாயச் சொத்து அறிவிப்பு ஏற்பாடானது பொது அதிகாரிகளின் செல்வத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும், மற்றும் சட்டவிரோத செறிவூட்டலுக்கு எதிரான தடுப்பாகச் செயல்படும். பொது ஊழியர்களை ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் இந்த நடவடிக்கையானது நலன்களின் முரண்பாடுகளைக் குறைப்பதோடு, தனிப்பட்ட இலாபத்திற்காக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதன் மூலம் பொது அதிகாரிகளின் நிதிச் செயற்பாடுகள் குறித்து பொதுமக்களுக்குத் தெளிவான புரிதல் இருக்கும். இது அதிக பொறுப்புக்கூறலை அனுமதிக்கும். அத்தோடு ஊழலுக்கான வாய்ப்புகளை குறைக்கும்.

மேலும், இந்த மசோதாவில் உள்ள சர்வதேச ஒத்துழைப்பு ஏற்பாடுகள் இலங்கையின் நாடுகடந்த ஊழலைக் கையாளும் முயற்சிகளுக்கு வலுச் சேர்க்கின்றது. சட்டவிரோதமாகச் சம்பாதித்த சொத்துக்களை விசாரிப்பதிலும், மீட்பதிலும் மற்ற நாடுகளுடன் ஒத்துழைக்கும் திறன், ஊழல் நபர்கள் நீதியைத் தவிர்ப்பது மற்றும் அவர்களின் குற்றங்களின் கொள்ளையை அனுபவிப்பது கடினமாக்கின்றது. இந்த ஏற்பாடு ஊழலுக்கு எதிரான உலகளாவிய முயற்சிகளுடன் ஒத்துப்போகின்றது, மற்றும் சர்வதேசச் சமூகத்தின் பொறுப்பான உறுப்பினராக இலங்கையின் நிலைப்பாட்டை மேம்படுத்துகின்றது.

ஊழல் தடுப்பு மசோதாவின் தாக்கம் சட்டக் கட்டமைப்பிற்கு அப்பாற்பட்டது. இது ஒருமைப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மதிக்கும் ஒரு சமூகத்தை ஊக்குவிக்கும். முறையான மாற்றத்தை கொண்டு வருவதற்கு இது ஆற்றலைக் கொண்டுள்ளது. பொதுத்துறை முதல் தனியார் நிறுவனங்கள் வரை அனைத்து மட்டங்களிலும் ஊழலை வேரறுப்பதன் மூலம் முதலீட்டை ஈர்க்கக் கூடியதாக இருக்கும். தொழில்முனைவோரை ஊக்குவிக்கும், மற்றும் வளங்களின் சமமான விநியோகத்தை உறுதி செய்யும் சூழலை இலங்கை வளர்க்க முடியும்.

எவ்வாறாயினும், ஊழல் எதிர்ப்பு மசோதாவை வெற்றிகரமாகச் செயற்படுத்த அனைத்து தரப்பினர்களின் அர்ப்பணிப்பு மற்றும்விடாமுயற்சியும்தேவைப்படுகின்றன. ஊழல்தடுப்பு ஆணையத்தின் ஆணையை திறம்பட செயற்படுத்த அரசாங்கம் போதுமான ஆதாரங்களை ஒதுக்கி ஆதரிக்க வேண்டும். கமிஷன் ஆணைக்குழு சுயாதீனமாகவும்திறமையாகவும்செயற்படுவதை உறுதிசெய்யத் தேவையான பயிற்சி, பணியாளர்கள் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றை வழங்குவது இதில் அடங்கும்.

மேலும், ஒருமைப்பாடு மற்றும் நெறிமுறைகளின் கலாசாரத்தை ஊக்குவிக்க பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் கல்வி முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஊழலின் எதிர்மறையான விளைவுகள், ஊழலற்ற சமுதாயத்தின் நன்மைகள் போன்ற பலவற்றை பொதுமக்களுக்கு கற்பிப்பதன் மூலம் ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் தனிநபர்கள் தீவிர பங்கேற்பாளர்களாக மாறலாம்.

நிறைவாக, இலங்கையில் ஊழல் எதிர்ப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை நாட்டினது ஊழலுக்கு எதிரான போரில் குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். ஒரு சுயாதீனமான ஊழல்எதிர்ப்பு ஆணையத்தை நிறுவுவதன் மூலமும், தகவல் வெளியிடுபவர்களைப் பாதுகாப்பதன் மூலமும், வெளிப்படைத்தன்மை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும், இந்த மசோதா மிகவும் பொறுப்புணர்வு மற்றும் ஊழலற்ற சமூகத்திற்கான அடித்தளத்தை அமைக்கின்றது.

இந்தச் சட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்த அரசு, சிவில் சமூகம் மற்றும் பொதுமக்களின் கூட்டு முயற்சிகள் தேவைப்படும். நீடித்த அர்ப்பணிப்பு மற்றும் செயலூக்கமான நடவடிக்கைகளுடன், இலங்கை ஊழலால் முன்வைக்கப்படும் சவால்களை வெற்றிகொண்டு அதன் குடிமக்களுக்கு வளமான மற்றும் சமமான எதிர்காலத்தை கட்டியெழுப்பமுடியும்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

# பாரம்பரிய எள்ளுப்பாகு உற்பத்தியில் சாதிக்கும் கண்ணம்மா நிறுவனம்!

நேர்கண்டவர் - ஞா.கவினி

> ஒரு தொழிலை ஆரம்பிக்கும்போது எடுத்த மாத்திரத்திலேயே எல்லாம் வெற்றியடையலாம் என்று நினைப்பது நல்லதில்லை. இப்படித்தான் எனது உற்பத்திகளையும் சந்தைப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் மிகவும் சிரமப்பட்டு இருக்கிறேன். எத்தனையோ கடைகளுக்கு ஏறி இறங்கி அவமானப்பட்டு இருக்கிறேன்.




**உரிமையாளர் சிங்கராஜா மகிந்தன்**

பனங்கட்டி என்று கலப்படமில்லாத உடலுக்கு நன்மை பயக்கும் உணவுப் பொருட்களை வழங்கிவருகிறார் கண்ணம்மா உற்பத்திகளின் உரிமையாளர் சிங்கராஜா மகிந்தன்.

ஆரம்பத்திலிருந்தே வாழ்க்கை எப்போதும் கஷ்டங்களையும் சவால்களையும் தான் எனக்கு முன் வைத்திருந்தது. அந்த கஷ்டங்களும் சவால்களும் தான் என்னை வெற்றிப் பாதைக்கு உந்தித் தள்ளியவை எனலாம். எப்படியாவது வாழ்க்கையில் வெற்றி பெற்று விட வேண்டும் என்ற அவா எனக்குள் வருவதற்கு பல அவமானங்களும் பல நிராகரிப்புகளும் காரணமாக இருந்திருக்கின்றன என்கிறார் கண்ணம்மா உற்பத்திகளின் உரிமையாளர்.

### ஆரம்பம்

புலம்பெயர்ந்து மலேசியாவில் மூன்று ஆண்டுகள் தொழில் புரிந்தபோது தான் எனது சொந்த நாட்டில் ஏதாவது ஒரு சொந்த தொழிலை ஆரம்பித்து ஒரு நல்ல முதலாளியாக வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்தது. இன்னொருவரிடம் கைகட்டி வேலை பார்த்துச் சலித்து போன பலரை நான் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் நானும் ஒரு முதலாளியாக வேண்டும். எனது பணியாட்களைச் சகோதரர் போல நடத்த வேண்டும் என்று கனவு கண்டிருக்கிறேன்.

திடீரென தாய் மண் வந்தபோது எனக்கென்று எந்தப் பிடிப்பும் இல்லாமல் தற்காலிக வேலைகளிற்கு போய்க்கொண்டிருந்தேன். ஏதாவது செய்ய வேண்டும் என்று யோசித்த போது தான், தற்போது மருவிப் போய்க் கொண்டிருக்கும் எங்களது பாரம்பரிய உணவுகளை கொடுக்க வேண்டும் என்றும் அதிலும் எள்ளுப்பா நல்லெண்ணெய் போன்ற எமது பிரதேசத்திற்கே உரிய உணவு வகைகளைச் செய்ய வேண்டும் என்றும் தோன்றியது. அதன் தொடர்ச்சி தான் 2018 ஆம் ஆண்டு ஆரம்பித்த கண்ணம்மா உற்பத்திகள் ஆரம்பத்தில் ஒரு கிலோ எள்ளினை வாங்கி எள்ளுப்பாகு செய்ய ஆரம்பித்தோம். அனுபவமும் பட்டறிவும் இல்லாத காரணத்தினாலோ என்னவோ எமக்கு தோல்வியே மிஞ்சியது.

ஆனாலும் மனம் தளராமல் இந்த தொழிலைத் தொடர்வதற்கு அம்மாவின் ஆலோசனையும் மனைவியின் ஆதரவும் எனக்கு அத்தனை பலமாக இருந்தது. ஒரு துவிச்சக்கர வண்டியில் எத்தனையோ கிலோமீற்றர்கள் வியர்வை வழிய வழிய எனது உற்பத்திப் பொருட்களை எடுத்துச் சென்றிருக்கிறேன். ஆரம்பத்தில் எமது உற்பத்திகள் பற்றி அறிமுகம் இல்லாத காரணத்தினால் பல இடங்களில் நிராகரிக்கப்பட்டு வீட்டுக்குத் திரும்பிவந்த சந்தர்ப்பங்களும் இருந்தன. உற்பத்தி செய்த பொருட்களைச் சந்தைப்படுத்த முடியாமல் ஆரம்பத்திலேயே பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் அடைந்து இருக்கிறேன். என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பி நின்ற போதெல்லாம் என் நம்பிக்கையை உடைய விடாமல் காத்தது என் குடும்பத்தினர் தான். உண்மையில் குடும்பத்தில் உள்ளவர்கள் ஆதரவளித்தால் எந்தத் தொழிலும் வெற்றி பெற முடியும் என்பதை நான் அனுபவ ரீதியாக உணர்ந்து இருக்கிறேன்.

### சந்தைப்படுத்தல்

ஒரு தொழிலை ஆரம்பிக்கும்போது எடுத்த மாத்திரத்திலேயே எல்லாம் வெற்றியடையலாம் என்று நினைப்பது நல்லதில்லை. இப்படித்தான் எனது உற்பத்திகளையும் சந்தைப்படுத்துவதற்கு ஆரம்பத்தில் மிகவும் சிரமப்பட்டு இருக்கிறேன். எத்தனையோ கடைகளுக்கு ஏறி இறங்கி அவமானப்பட்டு இருக்கிறேன். அப்போது என்னை நம்பி எனக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்தது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ரூபன் மல்ரி சென்டர். மொத்த வியாபாரத்தை மேற்கொள்ளும் ரூபன் மல்டி சென்டர் இன் இயக்குனர் எனது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு பெரிதும் ஆதரவாக இருந்தார். அதேபோல ஒரு பழைய துவிச்சக்கர வண்டியில்

எனது உற்பத்திப் பொருட்களைச் சுமந்து திரிந்ததை பார்த்த எனது நண்பன் ஒருவரின் தன்னிடம் உள்ள மோட்டார் சைக்கிளை தந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தை கட்டும்படி உற்சாகப்படுத்தி உதவினார். உண்மையிலேயே எனது வியாபாரத்தை நான் மேம்படுத்துவதற்கு எனக்கு அந்த வாகனம் பெரிதும் உதவியாக இருந்தது. இப்படித்தான் எங்கேயும் ஒவ்வொருவருக்கும் கை கொடுப்பதற்கு கடவுள் யாரையாவது நியமித்திருப்பார் என்று நினைக்கிறேன். தற்போது எனது உற்பத்தித் தரமும் அதனை வெளிப்படுத்தும் ஊடகங்களின் உதவியுமாக எனது உற்பத்திகளுக்கு கடைகளில் தனி மதிப்பு இருக்கிறது. “எள்ளுப்பாகு மற்றும் நல்லெண்ணெய் என்றால் அது கண்ணம்மா உற்பத்தி தான்” என்று சொல்லக்கூடிய அளவிற்கு வாடிக்கையாளர்கள் எமது உற்பத்தியை விரும்பி கொள்வனவு செய்கின்றனர்.

ஒரு கிலோ மூலப்பொருளில் ஆரம்பித்த எமது உற்பத்தி இன்று 25 கிலோவில் நாளாந்தம் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு வளர்ந்து இருக்கிறது என்றால் நம்பகரமான கலப்படமற்ற நமது உற்பத்தி முறையும் நமக்கு கிடைத்த வாடிக்கையாளர்களுமே காரணம். அண்மையில் நமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் கூட எனது உற்பத்திக்கான விலையை அதிகரித்தபோதும் சந்தைப் படுத்தலில் எந்தச் சரிவையும் காணாதது எனக்கு இன்னும் நம்பிக்கையைம் வாடிக்கையாளர்களுக்கு இன்னும் அதிகமாக நல்லவற்றைக் கொடுக்க வேண்டும் என்கின்ற உற்சாகத்தையும் அளித்திருக்கிறது.

**சவால்கள்**

சொந்தத் தொழில் என்றாலே சவால்கள்





நிறைந்தது தானே. எனக்கும் ஒவ்வொரு விடயத்திலும் பல்வேறு விதமான சவால்கள் ஏற்பட்டது தான். ஆரம்பத்தில் எள்ளுப் பாகைச் சரியான முறையில் கொண்டு வருவதற்கு நாங்கள் சிரமப்பட்டு இருக்கிறோம். கூடிய உற்பத்தியினை குறைந்த விலைக்கு விற்றதனூடாக நஷ்டத்தை கூட பார்த்திருக்கிறோம். பின்பு வந்த அனு



பவங்கள் எம்மை சரிவர வழி நடத்தி இருக்கின்றன. அதேபோல் மூலப்பொருள் கொள்வனவு செய்வதில் இருந்த நிதி நெருக்கடிகள் மற்றும் சந்தைப்படுத்தல் என்று இந்த வெற்றிக்கு முன்னால் ஏகப்பட்ட சவால்களை சந்தித்து அதனைத் தாண்டி வந்திருப்பது உண்மையிலேயே இப்போது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. ஒரு தொழிலை ஆரம்பிக்கும்போது சவால்களைக் கண்டு சோர்ந்து போகாமல் முன்னோக்கி ஓடுவதற்கு நாங்கள் தயாராக இருக்க வேண்டும். நான் இந்த சவால்களை எல்லாம் கடந்து வருவதற்கு பெரிதும் உதவியவர்கள் எனது குடும்பத்தினர். பணியாட்களை அமர்த்தாத காலங்களில் எனது சகோதரர்கள் தாய் மனைவி என்று பலரும் பல வகைகளில் எனக்கு உதவி செய்தனர். 2019 ஆம் ஆண்டிலிருந்து ஆறு பணியாளர்கள் எமது உற்பத்தி நிலையத்தில் பணியாற்றுகிறார்கள். உண்மையிலேயே நல்ல பணியாட்கள் என்பது பெரும் பலம். என்னுடைய பணியாளர்கள் எனக்கு சகோதரர்களை போன்று என் உயர்விலும் தாழ்விலும் என்னோடு இருக்கிறார்கள்.

சவால்களை வெற்றி கொள்வதற்கு இவர்களும் மிகப் பிரதான காரணம் என்று நம்புகிறேன்.

**கனவு**

உண்மையிலேயே இந்தத் தொழிலை பற்றி எனக்கு நிறையக் கனவு இருக்கிறது. எனது தொழிலை விருத்தி செய்ய வேண்டும். பனங்கட்டியைத் தற்போது நமது தொழிற்சாலைக்கென்று பிரத்தியேகமாக இன்னும் ஒரு நண்பர் செய்து தந்து கொண்டிருக்கிறார். ஆகவே பனங்கட்டி நல்லெண்ணெய் போன்றவற்றை இன்னும் அதிகமாக உற்பத்தி செய்வதற்கும் இந்த தொழிற்சாலையை விருத்தி செய்வதற்கும் இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கும் முயற்சிக்கிறேன். காலம் கைகூடும் என்றால் இன்னும் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்குவதோடு நமது பாரம்பரிய உற்பத்திகளை மென்மேலும் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் எண்ணமும் இருக்கிறது.

**ஆலோசனை**

உண்மையில் ஒவ்வொரு தொழில் முயற்சியாளரும் தமக்கு நிபுணத்துவம் உள்ள துறையில் கால் பதிக்க வேண்டும் இல்லையெனில் ஆரம்பித்த துறை பற்றி கற்றுக் கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும். எப்பேர்ப்பட்ட சவால்கள் வந்




தாலும் அவற்றிலிருந்து மீண்டெழும் பக்குவத்தையும் நம்பிக்கையையும் விடாதிருக்க வேண்டும். நாங்கள் நல்லவற்றை கொடுக்கும்போது வாடிக்கையாளர்கள் நம்மை வாழ வைப்பார்கள். இந்த நேரத்தில் என் வெற்றிக்கு பின்னாலும் முன்னாலும் நின்று கடுமையாக உழைக்கும் எனது அம்மாவுக்கும் மனைவிக்கும், இக்கட்டான நேரங்களில் எல்லாம் எனக்கு கரம் கொடுத்த சகோதரர்களுக்கும் நண்பர்களுக்கும் கண்ணம்மா உற்பத்திகளுக்கு கரம் கொடுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் எங்களை விளம்பரப்படுத்தி உதவுகின்ற ஊடகங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு எப்போதும் கண்ணம்மாவின் உற்பத்திகள் வாடிக்கையாளர்களுக்கு ஊட்டச்சத்தோடு ஒரு பெரும் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்பும் நம்பிக்கையையும் சுமந்து வரும் என்கிறார் கண்ணம்மா உற்பத்திகளின் உரிமையாளர் சிங்கராஜா மகிந்தன்.



# உழைப்பு

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

"பஞ்சம் பொழைக்க வந்தமா வீணாவில செலவு வெச்சா எப்பிடி நம்ப ஊருக்குப் போவ முடியும்" இது எங்கள் கிராமத்தில் வந்து குத்தகைக்கு நிலம் எடுத்து தோட்டம் செய்தும் கூலிக்குப் போயும் வாழ்க்கையை நடாத்தும் செவத்தராமன் என்று அழைக்கப்பட்ட ஓர் இந்தியத் தமிழரின் கூற்று. 'ராமனில என்ன சிவப்பு அவர் நீலம்தானே' என்று நாங்கள் கிண்டல் செய்வோம். அவர் ஒரு புன்னகையால் அவற்றைக் கடந்து போவார். மிக ஆரோக்கியமாக இருந்தார்கள். அவர்களுடைய உணவு வகைகள் எமக்குப் புதுமையாக இருக்கும்.

புதுக்காடு வெட்டி உருவாகிய புதுக்கிராமம். ஆங்காங்கே பெருமரங்கள் இன்னும் நின்றன. வீதிகளும் வண்டிப்பாதை தான். காட்டுவழி. எமது உணவில் வேட்டைப்பொருட்களும், மீனும், காட்டுப் பொருட்களும் மிகுதியாக இருக்கும். இறைச்சி மீன் கருவாடு, முட்டை இவை இல்லாமல் எமது உணவு இருக்காது. வெள்ளிக் கிழமையானாலும் அப்பாவுக்கு ஒரு கருவாடு பொரித்தே ஆகவேண்டும்.

ஆம்மா அவருக்கேற்ற பத்தினி. யாராவது என்ன பிள்ளை வெள்ளிக்கிழமையும் - என ஆரம்பித்தால் "வேகிற உடலுக்கு வெள்ளியென்ன செவ்வாயென்ன" என்று வாயை அடைத்த விடுவார். 'எப்ப பாத்தாலும் கொன்றுதான் தின்ன வேணுமோ"? என்றால் அதற்கும் "கொன்ற பாவம் தின்றால் போச்சு" என்பார். நாங்கள் சிவத்தராமனைப்பற்றிப் பார்க்கலாம்.

அவர் மனைவி 'ஆயிரத்தாள்'காலையில் எழுந்ததும் பழைய சோற்றில் மோர் விட்டுக்கலந்து வெங்காயம் பச்சைமிளகாய் என்பவற்றைச் சிறிதாக அரிந்து போட்டு ஒரு நீர் 'நீச்சத்தண்ணி' தயாரிப்பார். காலையில் அதை குடிக்காமல் அப்படியே ஒரு மண்பானையில் ஊற்றி எடுத்துக் கொண்டு வயலோ தோட்டமோ வேலை செய்யும் இடத்துக்குக் கொண்டு போவார்கள். சற்றே வேலை செய்து களைப்பானதும் அதை கூடியிருந்து பருகுவார்கள். ஆயிரத்தாள் காலையிலேயே ஒரு கணிசமான பெரிய பானையில் உலை வைத்து அரிசி போட்டு சோறாக்கி அதற்கென ஒரு சாம்பாரும் வைப்பார். சாம்பாரில் உப்பிருக்கும் உறைப்பிருக்கும் என்பதல்ல அதில் பலவகை மரக்கறிகள், பருப்பு, தாளிதம் என ஒரு சம பல சத்துக்கள் கலந்திருக்கும்.

புளிச்சக்கீரை என்றொரு வகை கீரை வட்டுக்காய் குருவித்தலை பாவற்காய் என பலநாட்கள் கெடாமல் இருக்கக்கூடிய கறிகளைத் தயாரித்து அடுப்புக்கு நேரே ஒரு உறிகட்டி அதில் தட்டுத்தட்டாக அடுக்கி தொங்க விட்டிருப்பார்கள். அவ்வளவுதான் காலை உணவு நீச்சத்தண்ணி மத்தியானம் இந்த சோறும் சாம்பாரும் உறியிலுள்ள



ஏதாவதொரு கறியில் தொட்டுக்கொள்ள கொஞ்சம் இடையே கொபீ பயறு என எதாவது கொறிக்கவும் கிடைக்கும். ஆயிரத் தாளிடம் நாங்கள் மீனைக் கொடுத்தால். 'அய்யே கவிச்சியா? அது எனக்கு கோளாறு பண்ண தெரியாதுங்களே" என்பாள். நாங்களும் குளம் வற்றும் காலத்தில் கரப் புக்குத்தி ஊரவர்களுடன் கூடி மீன் பிடிக்கும் போது நிரம்ப மீன் கிடைக்கும் அதை அயலவருடன் பங்கு போடுவோம். இதை விட ஆயிரத்தாள் எமக்கு ஆரைக்கீரை பொன்னாங்கண்ணி, வல்லாரை என்ப வற்றை வித்தியாசமாக சமைக்க கற்றுத் தந்தாள்.

மச்சம் மாமிசமே வாழ்க்கையாக கொண்டிருக்கும்என்தந்தை சிவத்தராமனை கடிந்து கொள்வார். "என்னப்பா சாப்பாடு நல்ல மீன் இறைச்சியில சாப்பிடப்பா வேலை செய்யிற மனிசன் திங்கிற சாப்பாடா இது?"அப்போதெல்லாம் எடுத்ததெற்கெல் லாம் வைத்தியசாலைக்கு செல்வது மிக குறைவு. காயங்களைப் பச்சிலைகளை வைத்தே குணப்படுத்திக் கொண்டார்கள் நோவெண்ணை எல்லா வீடுகளிலும் இருக்கும் பெரும்பாலும் இலுப்பெண்ணை மயிலெண்ணை, வெங்கிணாந்திஎண்ணை, என்பனவற்றை எங்கள் வீட்டில் களஞ் சியப்படுத்தியிருப்போம். முதலிரண்டும் பல வீடுகளில் இருக்கும். நாங்கள் மட்டு மென்ன தோட்டங்களில் வேலை செய்து கொண்டே அங்கே கிடைக்கும் வெண்டிக் காய், வெள்ளரிக்காய், கெக்கரிக்காய் கச் சான், பயறு எதையும் கடைவாய்வழியே பால்வடிய வடிய சப்பிக்கொண்டேயிருப்போம்.

எல்லாம் ஆயிரத்தாளும் சிவத்தராம னும் காட்டித் தந்ததுதான். அவர்களுக்கு எப்போதும் வேலை இருந்து கொண்டே இருக்கும். ஒருநாளாவது வேலை இல்லை யென்றால் அடுத்தவர்களுடைய தோட்டத் தில் போய் வேலை செய்வார்கள்.

வருடத்தில் இரண்டு சினிமாப்படம் பார்ப்பார்கள். அதைப்பற்றி வருடம் முழுக்க பேசிக் கொண்டே இருப்பார்கள் படத்தைப் பற்றி மட்டுமல்ல அதற்கான செலவையும் நேரத்தையும் பற்றியும்தான். ஏதாவது கண்டிக்கப்போனால் அதே பதில்தான். " பஞ்சம்பொழைக்க வந்தமா" என ஆரம்பித்து விடுவான்தமக்குள் ஏராளமான நாட்டர் பாடல்களை வைத்திருப்பார்கள். தலைநிமி ராத பவ்வியமான பெண்களாக இருந்தா லும் வயலில் இறங்கி வேலை செய்யும் போது மிக அழகாக பாடுவார்கள். கருத்தான பாடல்கள் மட்டுமல்ல கேலி கிண்டலாகவும் பாடுவார்கள். காதல்பாடல்களும் கைவசம் இருக்கும். இதுதான் இவர்களது கேளிக்கை பொழுதுபோக்கு.

இது ஒரு சிவத்தராமனின் கதையல்ல. இப்படி ஏராளமானவர்கள் தமது பஞ்சத்தைப் போக்க அப்போது உழைத்துக் கொண்டி ருந்தார்கள். இவர்களது உழைப்பில் ஏரா ளமான காடுகள் கழனிகளாக மாறின. என்றாலும் இவர்களுக்கு அதில் எந்த சொந்தமும் இல்லை. நிலங்களைப் பெரும் பணக்காரர்களுக்கே வைத்திருக்க முடிந் தது. காலையில் மின்னும் வெய்யிலில் சிவத்தராமன் உழவு மாடுகளின் பின்னே நடக்க ஆரம்பித்தால் மாலைவரை நடப் பான். அது சேற்று வயலோ தரிசோ ஏறக் குறைய நாளொன்றுக்கு அவன் நடக்கும் தூரம் முப்பது நாற்பது கீலோ மீட்டருக்கும் அதிகம். மண்வெட்டி கோடரி பிக்கான், வாள் என எந்தவகை ஆயுதமும் அவன் கைவசப்படும்.

இவர்கள் தமது தோட்டத்தையோ வயலையோ அறுவடை செய்யும்போது ஊரவர்கள் அதிசயிப்பதுண்டு. பழைய நாட்டு நெல் வர்க்கங்களில் ஏக்கருக்கு சுமாராக இருபது மூடைகளே கிடைக்கும். இவர்கள் முப்பது மூடைகளுக்கும் அதிகமாக விளைவிப்பதுண்டு. நிலத்தை அவர்கள் வள்ளுவர் சொல்வது போல தயார்ப் படுத்துவார்கள்.

பயிர்ச்செய்கையில் புதிய அறிமுகங் களை இவர்கள் எமக்கு கற்றுத்தந்தார்கள். வெண்காயம் நடும்போது மிளகாய்க் கன்றுகளையும் நடுவது. வெங்காயம் பிடுங்கியபின் இரண்டுமாத மிளகாய்க் கன்று வளர்ந்துவிடும். கரையோர வாய்க் காலில் வெண்டி போடுவது. நிழல் அருட்டும் இடங்களில் குரக்கன் விதை தூவுவது. பட்டை இறைப்பைக் கமலை இறைப்பாக மாற்றியது. வேலிகளில் பீர்க்கு நடுதல். சுரைக்கொடியை வீட்டுக் கூரையிலேயே படர விடுவது. என ஒரு அங்குல நிலமும் வீணாகாமல் பயிரிடும் சிறப்பு ஒவ்வொரு தானியத்திலும் அதன் பயன்பாடு கருதி உணவை தயாரிப்பது. என எத்தனை இரகசியங்கள்.

இந்தப் பெண்களிடம் மட்டும் எத்தனை திறமைகள். கரும்பு வளையை கத்தி யில்லாமலே லாவகமாக மடித்து உடைத்து எடுப்பார்கள். அதை ஒரு மரத்தில் அடித்து கீலங்கீலமாக வெடிக்க வைத்து சப்பத்தரு வார்கள். வீட்டுக்கு விறகு சேகரிப்பது முதல், தண்ணீரை பானைகளில் சரிக்கா மல் வார்ப்பது வரை எத்தனையோ நுட் பங்கள் இருக்கும். எப்படியும் வீட்டுக்கு வீடு ஐந்து ஆடுகளிற்கு குறையாமல் இருக் கும். பசுமாடு ஒன்றிருக்கும் பால், தயிர் மட்டுமல்ல நெய்யும் சேகரித்து விடுவார் கள். (வன்னியில் பண்ணைக் கணக்கில் மாடு வைத்திருப்பவர்கள் பெரும்பாலும் அனைத்து மாடுகளிலும்பால்கறப்பதில்லை.)

இவர்கள் தமது தோட்டத்தையோ வயலையோ அறுவடை செய்யும்போது ஊரவர்கள் அதிசயிப்பதுண்டு. பழைய நாட்டு நெல் வர்க்கங்களில் ஏக்கருக்கு சுமாராக இருபது மூடைகளே கிடைக்கும். இவர்கள் முப்பது மூடைகளுக்கும் அதிக மாக விளைவிப்பதுண்டு. நிலத்தை அவர் கள் வள்ளுவர் சொல்வது போல தயார்ப் படுத்துவார்கள்.

முடிவில் இவர்கள் தமது நாட்டுக்கு புறப்பட்டுப் போனார்கள் வேதனையோடு வழியனுப்பி வைத்தோம். தமது உடை மைகளை மட்டுமல்ல எமது அன்பளிப்புக களையும் கொண்டு செல்லும் பொது, "பஞ்சம்பொழைக்க வந்தமா" என சொன்ன சிவத்தராமன்களை அவர்களது உழைப்பை எண்ணிவியக்காமல்இருக்க முடியவில்லை.

தமிழர் பொருணமியம்
வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
25.06.2023



நடப்புப் பருவத்துக்கு ஏற்ற தோட்டப் பயிரான உருளைக்கிழங்கைப் பயிர் செய்வதன் மூலம் விவசாயிகள் அதிக பயன்பெறலாம் என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர். தோட்டப் பயிரான உருளைக்கிழங்னை ஜனவரி - பெப்ரவரி, மார்ச் - ஏப்ரல், ஆகஸ்ட் - செப்டம்பர் ஆகிய பருவங்களில் பயிர் செய்யலாம்.

# உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் அதிக விளைச்சலும் இலாபமும் பெற..

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



நடப்புப் பருவத்துக்கு ஏற்ற தோட்டப் பயிரான உருளைக்கிழங்கைப் பயிர் செய்வதன் மூலம் விவசாயிகள் அதிக பயன்பெறலாம் என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தோட்டப் பயிரான உருளைக்கிழங்கை ஜனவரி - பிப்ரவரி, மார்ச் - ஏப்ரல், ஆகஸ்ட் - செப்டம்பர் ஆகிய பருவங்களில் பயிர் செய்யலாம்.

இந்தப் பயிருக்கு மணல் கலந்த வண்டல் மண் சிறந்ததாகும். ஓர் ஏக்கருக்கு 1500 முப வரை விதை தேவைப்படும்.


**விதை நேர்த்தி**

விதைக் கிழங்குகளை நோய் தாக்காத நிலங்களில் இருந்து தேர்வு செய்ய வேண்டும். சிறிய துண்டுகளாக வெட்டிய விதைக் கிழங்கை உபயோகப்படுத்தும்போது அதை 10-15 செல்சியஸ் வெப்ப நிலையிலும், 85 முதல் 90 சதவீத ஈரப்பதத் திலும், 4 முதல் 6 நாள்கள் வரை வைக்க வேண்டும்.

இவ்வாறு வைப்பதால் மண்ணில் உள்ள நுண்ணுயிர்க் கிருமிகள் கிழங்கில் நுழைவதைத் தடுக்கலாம்.

விதை முளைப்பை அதிகப் படுத்த 25 பிபிஎம் ஜிப்ராலிக் அமிலத்தில் ஒரு மணி நேரம் ஊற வைத்து பின்னர் நிழலில் உலர்த்த வேண்டும்.

இவற்றை 10 நாள்கள் ஒரு சாக்கு பேக்கில் நிரப்பி காற்றோட்டமுள்ள இருட்டு அறையில் வைக்க வேண்டும். 4 அடி அகலமுள்ள உயரப் பாத்தியில் 30 செ.மீ. இடைவெளியில் 4 வரிசை வருமாறு நட வேண்டும்.



**நீர்வழிஉரமிடல்**

சொட்டு நீர்ப்பாசன முறையில் தினமும் ஒரு மணி நேரம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

தேவையான அளவு நீரில் கரையும் உரத்தை சொட்டு நீர்ப் பாசனத்துடன் இணைக்கப்பட்டுள்ள உரத் தொட்டியின் மூலம் இட வேண்டு.

நடவு செய்த 25 நாள்களுக்குப் பிறகு விதைக் கிழங்கின் இடைக்கணுப் பகுதியில் இருந்து தண்டு முளைத்து மண்ணை நோக்கி வளரும்.

பின்னர் அதன் நுனியில் இருந்து கிழங்கு உருவாகத் தொடங்கும் இந்த நிலையில் மண் அணைத்தல் மிகவும் அவசியம்.

**அறுவடை:**

அறுவடை செய்யக் கிழங்குகளைத் தோண்டி எடுத்துச் சுத்தம் செய்து பேக்கில் சேகரிக்கலாம். விதைக்காக கிழங்குகளை அறுவடைக்கு 15-இல் இருந்து 20 நாள் களுக்கு முன்பி ருந்து நீர் பாய்ச்சுவதை நிறுத்த வேண்டும்.

இதன் மூலம் கிழங்குகளின் தோல் தடிமனாகி அதன் சேமிப்புக் காலத்தை அதிகப்படுத்தும்.

மேலும் வைரஸ் நோய்களை மற்றச் செடிகளுக்கு பரப்பும் அசுவினி பூச்சிகளின் பெருக்கத்தைத் தடுக்கிறது. இதைச் சிறந்த முறையில் விதைக்காகப் பயன்படுத்தலாம்.

அறுவடை செய்த கிழங்குகளை ஓரிடத்தில் குவியலாக வைப்பதன் மூலம் அவற்றை சுத்தம் செய்வது எளிதாகிறது.

பின்னர் பெரிய, சிறிய, நடுத்தர அளவுள்ள கிழங்குகளைப் பிரித்தெடுக்க வேண்டும். நோய், பூச்சி தாக்கிய கிழங்குகளைத் தனியே எடுத்துவிட வேண்டும்.

இந்த முறையில் விவசாயிகள் உருளைக்கிழங்கைப் பயிரிட்டால் அதிக பயன்பெறலாம் என வேளாண் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மை தொடர்புகொள்ளவும். **Ph: 0770239784**



# லாபம் தரும் எள் பயிர்ச்செய்கை

## இயற்கை முறைச் செய்கை

எள், மணல் கலந்த நிலத்தில் நல்ல விளைச்சல் கொடுக்கும். நவம்பர், டிசம்பர், மார்ச், ஜுன் ஆகிய மாதங்களில் விதைக் கலாம்.

அனைத்துப் மாதங்களும் விதைக்கக் கூடிய எள் இரகங்களும் இருக்கின்றன. தேர்வு செய்த ஓர் ஏக்கர் நிலத்தில் 2 டன் மாட்டு எருவைத் தூவ வேண்டும். பிறகு 15 நாட்களுக்குள் இரண்டு உழவு செய்ய வேண்டும்.

நிலம் புழுதியான பிறகு, பாத்தி எடுத்து, பாத்திகளில் எள்ளைத் தூவ வேண் டும். ஏக்கருக்கு அரைகிலோ விதை எள் தேவைப்படும். காற்றடிக்கும் போது எள்ளை விதைக்கக் கூடாது. அப்படி விதைத்தால் மொத்த எள்ளும் ஒரே இடத்தில் போய் விழுந்துவிடும்.

அரை கிலோ விதை எள்ளுடன், ஒன்றரை கிலோ மிருதுவான மணலை கலந்து தூவலாம் தூவிய உடனே தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இல்லையெனில், எள்ளை எறும்பு தின்ன ஆரம்பித்து விடும்.



அதற்குப் பிறகு வாரம் ஒருமுறை தண் ணீர் பாய்ச்சினால் போதுமானது. செடி இரண்டு அங்குலம் வளர்ந்த பிறகு 100 லிற்றர் ஜீவாமிர்தத்தைப் பாசனத்துடன் கலந்து பயிருக்குக் கொடுக்க வேண்டும்.

15-ம் நாள். களை எடுக்க வேண்டும். களை எடுத்து 5 நாள் கழித்து ஜீவாமிர்தம் கொடுக்க வேண்டும். அதேபோல 30 முதல் 35-ம் நாளுக்குள் இரண்டாம் களையெடுக்க வேண்டும். களையெடுத்த பிறகு பாசனம் செய்யும்போது, அதில் 100 லிட்டர் ஜீவாமிர்தம் கலந்து கொடுக்க வேண்டும்.

40-ம் நாள், 10 லிட்டர் மூலிகைப் பூச்சிவிரட்டி தெளிக்க வேண்டும். 40 ஆம் நாளுக்கு மேல் இலைசுருட்டுப் புழுத் தாக்குவதற்கான வாய்ப்பு அதிகம்.

அதனால் மூலிகைப் பூச்சிவிரட்டி தெளிப் பதன் மூலம் அதைத் தடுக்கலாம்.

எந்தப் பூச்சி விரட்டியாக இருந்தாலும் சரி காலை வேளையில் தெளிக்கக் கூடாது.

*அறுவடை செய்த பயிர்களை வயலிலே 2 நாட்கள் பரப்பி வைக்கவேண்டும். பிறகு, ஒரு பொலித்தீன் மேல் தனித்தனியே பிரித்து வெய்யிலில் காய வைத்தால், எள் மட்டும் தனியே கொட்டிவிடும். இதுபோன்று மூன்று நான்கு முறை செய்தால், அனைத்து எள்ளும் செடியை விட்டுத் தனியாக வந்துவிடும்.*

அதற்கு பிறகு அதிக பராமரிப்பு தேவை யில்லை. 40ஆம் நாளுக்கு மேல் பூ பூக் கும் தருணத்தில் ஜீவாமிர்தமும், பூச்சிவிரட்டி யும் பயன்படுத்துவதால் விளைச்சல் பாதிக் காது. 70-ம் நாள் பயிர், பழுப்பு நிறத்தை அடையும். 90ஆம் நாள் அறுவடைக்குத் தயாராகிவிடும்.

அறுவடை செய்த பயிர்களை வயலிலே 2 நாட்கள் பரப்பி வைக்கவேண்டும். பிறகு, ஒரு பொலித்தீன் மேல் தனித்தனியே பிரித்து வெய்யிலில் காய வைத்தால், எள் மட்டும் தனியே கொட்டிவிடும். இதுபோன்று மூன்று நான்கு முறை செய்தால், அனைத்து எள்ளும் செடியை விட்டுத் தனியாக வந்து விடும்.

## அறுவடை அறிகுறி

1. எள் செடியின் கீழ் பகுதியிலுள்ள 25 சதவீதம் இலைகள் உதிர்ந்து விடும், மேலே உள்ள இலைகள் மற்றும் தண்டுப் பகுதிகள் மஞ்சள் நிறமாக மாறியிருப்பின் அறுவடையைத் தொடங்கிவிடலாம்.

2. எள் காய்கள் பாதியளவு மஞ்சள் நிறம் அடைந்து விட்டால் பயிர் அறுவடை செய்திட ஏற்ற பருவம் ஆகும். வெள்ளை எள் பயிருக்கு எள் விதை வெள்ளை நிறம் அடைய வேண்டும்.

3. எள் பயிரின் கீழ் பகுதியிலிருந்து பத்தாவது காயை உடைத்துப் பார்த்தால் உள்ளே இருக்கும் விதைகள் கருப்பு நிற மாக மாறியிருந்தால் அறுவடை செய்து விடலாம். இது கருப்பு எள் விதைக்கு மட்டும் பொருந்தும்.




# 'இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி' தொடர்பாக அமைச்சரவையின் முடிவு

2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2(2) பிரிவின் கீழ், 2011ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் (SVAT) திட்டத்தை இரத்து செய்வதற்கான தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அண்மையில் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பெறுமதி சேர் வரி (VAT) விலக்குத் தொடர்பான அமைச்சரவையின் மற்ற முடிவு வரவேற்கத்தக்க நடவடிக்கையாக இருந்தாலும், 1 ஜனவரி 2024 முதல் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் (SVAT) திட்டத்தை இரத்து செய்யும் முடிவு, வரி செலுத்துவோர் மற்றும் வரி நிர்வாகத்தின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

### சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் வரி வரைபடத்தின் ஒரு பகுதியாக, இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் திட்டத்தை இரத்து செய்வதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் ஆவணம், "பெறுமதி சேர் வரித் திரும்பப் பெறுதல்களை கணிசமாக விரைவுபடுத்தவும், மற்றும் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமை'ஐ (SVAT) ஜனவரி 1, 2024 முதல் இரத்து செய்யவும் நடவடிக்கைகளை எடுங்கள்" என்று கூறுகின்றது. எனவே இது இலங்கையின் வரி விதிப்பு முறைக்குப் பாதகமான தாக் கத்தை ஏற்படுத்தும்.

இந்த முன்மொழிவை மேற்கூறிய ஆவணத்தில் சேர்க்கச் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளைத் தூண்டியது எது என்பது முதல் கேள்வி! இது ஒரு தவறான பிரதிநிதித்துவம் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. எனவே இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் திட்டத்தை அகற்றுவதால் ஏற்படும் தாக்கத்தை இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

### 'இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமை' (SVAT) அறிமுகப்படுத்தப்படுவதற்கான காரணம்

பெறுமதிசேர் வரியை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்குப் பெறுமதிசேர் வரி திரும்பப் பெறுதல்களின் (VAT refund) செயலாக்கத்தின் செயல்திறன் மிக முக்கியமானது. பெறுமதிசேர் வரி திரும்பப் பெறுதல்களை சரியான நேரத்தில் செயலாக்குவதில் உள்ள திறமையின்மையானது பாரிய பெறுமதி சேர் திரும்பப் பெறுதல்களை உருவாக்குவதற்கு வழிவகுத்து. வரி செலுத்துவோர் பணி மூலதனத்தை வரி



சு. அனந்த நாராயணன் சர்மா
ACCA (UK)

அலுவலகத்தில் நிறுத்தி வைக்கிறது. இது வரி செலுத்துவோர் பணப்புழக்கங்களில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறையை நடைமுறைப்படுத்துவதற்கு முன் ஏற்றுமதியாளர்கள், சீரோ மதிப்பிடப்பட்டுச் சேவை வழங்குனர்கள், குறிப்பிட்ட திட்டங்களில் ஈடுபட்டுள்ள நபர்கள், சட்டத்தின் 22(7) பிரிவின்கீழ் பதிவு செய்தவர்கள், ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கும் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்களுக்கு குறிப்பிட்ட சேவைகளை வழங்குபவர்கள், மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்

களத்திலிருந்து பணத்தைத் திரும்பப் பெற்ற பல வரி செலுத்துவோர் போன்ற பலர் வரி அலுவலகத்தின் திறமையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில் பெரும் பெறுமதி சேர் வரிப் பணத்தைத் திரும்பப்பெறுதல் காரணமாக பல மோசடி மற்றும் ஊழலுக்கு வழி வகுத்துள்ளது.

இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி பொறிமுறையானது அத்தகைய நபர்களால் செலுத்தப்பட வேண்டிய வரியை இடைநிறுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் பணப்புழக்க நிலை பாதிக்கப்படாது, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வழங்கிய உறுதிச் சீட்டுக்களைப் பயன்படுத்திப் பணத்தை அவர்கள் திரும்பப் பெறக்கூடியதாக இருந்தது.

### மோசடிக்கு இடமளிக்கும்

பல வரி செலுத்துவோர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து சட்டப்பூர்வமாகத் தமது வரிகளைத் திரும்பப் பெறுவதற்காக, பல சேவை வழங்குநர்களை நாடினர். அவர்கள் சட்டப்பூர்வமாகச் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் திரும்பப் பெறுதல்களை விரைவுபடுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்து நாம் அறிந்த விடயமே.

### குழந்தையை குளியலறையில் வீசக்கூடாது!

தற்போதைய இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி அமைப்பில் முன்னேற்றத்திற்கு அதிக இடமிருந்தாலும், வரி செலுத்துவோருக்கு உள்நாட்டிலேயே பல நிவாரணம் அளித்துள்ளது. தற்போது பெரும்பாலான வரி செலுத்துவோர் கடந்த காலத்தைப் போலவே தங்கள் மூலதனம் நீண்ட காலத்திற்கு வரி அலுவலகத்தில் இருப்பதை மீண்டும் ஏற்கமாட்டார்கள். எனவே கொள்கை வகுப்பாளர்களின் கவனம் தற்போதைய செயல்முறையை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும்.

### பெறுமதி சேர் வரி திரும்பப் பெறுதலை (VAT refund) விரைவுபடுத்துதல்

'பெறுமதி சேர் வரி திரும்பப் பெறுதலைக் கணிசமாக விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்' என்று ஐஆகு முன்மொழிவு அமைகிறது. இதில் முக்கிய விஷயம் என்னவென்றால், பணத்தைத் திரும்பப்பெறும் செயல்முறையைக் கணிசமாகத் துரிதப்படுத்தும் இந்த நடவடிக்கைகள் எவை? ஆறு மாத காலத்திற்குள் இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டறிந்து அறிமுகப்படுத்துவது எவ்வளவு நடைமுறைக்குரியது?. இந்த ஆண்டு இறுதியில் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமை'ஐ (SVAT) ஒழிக்க முன்மொழிந்த வழக்கறிஞர்கள்/ஆதரவாளர்களால் இந்த நடவடிக்கைகள் சர்வதேச நாணய நிதியத்திற்கு முன்மொழியப்படவில்லை. அவ்வாறு நடவடிக்கைகள் இருந்தாலும், கடந்த காலங்களில் ஏன் அவை செயல்படுத்தப்படவில்லை? போன்றவை மர்மமாக உள்ளன.

> "தற்போதைய இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி அமைப்பில் முன்னேற்றத்திற்கு அதிக இடமிருந்தாலும், வரி செலுத்துவோருக்கு உள்நாட்டிலேயே பல நிவாரணம் அளித்துள்ளது. தற்போது பெரும்பாலான வரி செலுத்துவோர் கடந்த காலத்தைப் போலவே தங்கள் மூலதனம் நீண்ட காலத்திற்கு வரி அலுவலகத்தில் இருப்பதை மீண்டும் ஏற்கமாட்டார்கள்."

மேலும், ஏனைய வருவாய் சேகரிப்பு நடவடிக்கைகளின் செயலாக்கம், மற்றும் வருவாய் நிர்வாக மேலாண்மைத் தகவல் அமைப்பின் (RAMIS) தோல்வி போன்ற வரி அலுவலகத்தில் தற்போதைய திறமையின்மை குறித்து மக்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறார்கள்.

பல வரிக் கோப்புகள் ஒரே ஒரு வருவாய் அதிகாரியின் மீது சுமத்தப்பட்டிருப்பதால் திறமையின்மை உச்சம் தொட்டுள்ளது. இந்தப் பின்னணியில் பெறுமதி சேர் வரி திரும்பப் பெறுதலை (VAT refund) விரைவுபடுத்துவது பற்றிய சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையானது ஒரு விசித்திரமான கற்பனையை விட வேறொன்றுமில்லை என்றே கூற வேண்டும்.

அமைச்சரவையின் ஒப்புதலின்படி ஆண்டின் இறுதியில் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் (SVAT) திட்டத்தை இரத்துச் செய்வது கடந்த காலத்தில் இருந்ததைப் போலவே வரி செலுத்துவோர்க்கு பாரிய பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு வழிவகுக்கும், பணப்புழக்கங்களைப் பாதிக்கும், பெரும்பாலோர் ஏற்கனவே தங்கள் வணிகங்களை தற்போதைய பொருளாதார ஸ்திரமின்மையின் காரணமாக நிர்வகிக்க போராடுகிறார்கள். பெரும்பாலான வரி செலுத்துவோர் அந்தந்த வரி விகிதங்களில் உயர்வை அனுபவித்திருந்தாலும், ஏற்றுமதியாளர்களைப் பொறுத்தவரை, வருமான வரி விகிதம் 14% இல் இருந்து 30% ஆக அதிகரித்துள்ளது. மேற்கூறிய திட்டத்தை .இரத்து செய்வது நாட்டிற்கு தேவையான வெளிநாட்டு நாணயத்தை ஈர்க்கும் ஏற்றுமதியாளர்களின் போட்டி நிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

### இலங்கையின் முந்தைய வரிக் கொள்கைகள்

பல ஆண்டுகளாக இலங்கை வரி விதிப்பு முறையானது நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கொள்கைகளை சரியாக கருத்தில் கொள்ளாமல், தவறான கொள்கை முடிவுகளை எடுப்பதால் பல பாதகமான தாக்கங்களைச் சந்தித்துள்ளது.

2019இல் 'உழைக்கும் போது செலுத்தும் வரி'த் திட்டத்தை (PAYE) இரத்து செய்து, 1 ஏப்ரல் 2020 அன்று முன்கூட்டிய தனிநபர் வருமான வரி (APIT) திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாயம்.

பெறுமதி சேர் வரி (VAT) விகிதத்தை 12% இலிருந்து 8% ஆக குறைத்து, மீண்டும் விகிதத்தை 15% ஆக உயர்த்த வேண்டிய கட்டாயம்.

பெறுமதி சேர் வரி (ஏபுவு) வரம்பை ரூ.12 மில்லியன் இலிருந்து ரூ.300 மில்லியன் ஆக 2020இல் உயர்த்துதல். பின்னர் மீண்டும் அதை ரூ.80 ஆக 1 அக்டோபர் 2022 முதல் குறைக்க வேண்டிய கட்டா யம்.

இவ் வருட இறுதியில் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி திட்டத்தை (SVAT) இரத்து செய்வதற்கான அமைச்சரவை ஒப்புதல் தவறான ஆலோசனையின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பது பலரது கருத்து. இதை நிவர்த்தி செய்யாவிடின் மேலே குறிப்பிட்டுள்ள பட்டியலில் சேர்க்கும் மற்றுமொரு முடிவாக அமைந்துவிடும். பொறுத்திருந்து பார்ப்போம்!

# போலிக் கால்நடைச் சிகிச்சையாளர்கள்






Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

*"பல சட்ட விரோதச் சிகிச்சையாளருக்கு மருந்துகளை வழங்கும் பல மருந்துக் கம்பனிகள் இன்னுமொரு முக்கிய குற்றவாளிகள். யார் எவரென்று பாராமல் மருந்துகளை வழங்குவது. வெறும் விற்பனை இலக்கு. வருமானம். அவ்வளவுதான். சில வேளைகளில் ஆடு, மாடு, போன்ற உற்பத்தி விலங்குகளுக்கு வழங்கும் சக்தி மிக்க நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் மனித சுகாதாரத்தையே பாதிக்க வல்லன"*

கடந்த இரண்டு வாரங்களாகச் சட்ட விரோத சிகிச்சையாளர்கள் பற்றி எழுதி வருகின்றேன். இந்த முறையும் அதன் தொடர்ச்சியே.

ஒரு தனியார் கால்நடை வைத்திய நிலையத்தில் பணியாற்றிய ஒரு கால்நடை வைத்தியர் மற்றும் அவரது உதவியாளர் பற்றிய கதையிது. உதவியாளர் வைத்தியரின் பெறா மகன். ஆரம்பத்தில் வைத்தியரின் வேலைகளுக்கு கூடமாட ஒத்தாசைகள் செய்து வந்த மருமகன் சில வருடங்களின் பின் கால்நடை வைத்தியர் தூர இடத்துக்கு மாற்றலாகிப் போக முழு நேரக் கால்நடை வைத்தியர் போல மாறினான்.

செல்லப்பிராணிகளின் சிகிச்சைக்கு வரும் பலருக்கு கால்நடை வைத்தியரை தெரிந்ததை விட மருமகனைத்தான் அதிகம் தெரியும். பகலில் அவரிடமே சிகிச்சை பெறுவார்கள். காலப் போக்கில் கள விஜயங்களும் அவர் செய்யத் தொடங்கினார். அதாவது கால்நடை வைத்தியரின் பெயரில் அவரின் கால்நடை வைத்திய இலக்கத்தில். இதில் வேடிக்கை என்னவென்றால் பல்கலைக்கழகம் படிக்கும் காலத்தில் மருமகனிடம் நான் கூட எனது நாய்க்கு தடுப்பூசி போடச் சென்றகிருக்கிறேன். எனக்கு யார் வைத்தியர் என்று தெரியாது. ஒரு கால்நடை வைத்திய சிகிச்சை நிலையத்தில் சிகிச்சையளிப்பவரை யாரும் நீங்கள் வைத்தியரா என கேட்க மாட்டார்கள். சிகிச்சையளிப்பவர் வைத்தியராகத் தான் இருப்பார் என நினைக்கும் வாடிக்கையாளரின் மனநிலையை மேற்படி வைத்தியரும் மருமகனும் துஷ்பிரயோகம் செய்தனர்.

சமூகத்திலுள்ள பலரும் இதை அறிந்திருந்தும் கால்நடை வைத்தியரின் சமூகத்திலுள்ள நற்பெயர் காரணமாக யாரும் எதுவும் கதைக்கவில்லை. மேலும் அன்றைய நாட்களில் தனியார் கால்நடைச் சிகிச்சை நிலையங்கள் வவுனியாவில் இருக்கவில்லை என்பதும் அவர்களுக்கு அனுகூலமாக அமைந்தது.

இப்படியாக சிகிச்சை நடவடிக்கை வெற்றிகரமாக மருமகனால் செய்யப்பட்ட நிலையில் பணக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை ஏற்பட்டு இருவரும் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. முக்கியமாக கள விஜயம் செய்யும் கணக்குகளை மருமகன் வைத்தியருக்கு காட்டுவதில்லை. வெளியே அனுப்பி விட்டார். வெளியே வந்த மருமகன் சும்மா இருக்கவில்லை.கால்நடை வைத்தியரின் சிகிச்சை நிலையத்துக்கு அருகிலேயே ஒரு கடையை வாங்கி தானும் ஒரு சிகிச்சை நிலையத்தை தொடங்கி விட்டான்.

நான் முன்பு கூறியதைப்போல ஊரில் வைத்தியரைத் தெரிந்ததை விட மருமகனைத் தான் புதிய பல வாடிக்கையாளருக்கு தெரிந்திருந்தது. மேலும் பல வாடிக்கையாளரின் தொடர்பு இலக்கத்தை மருமகன் சாதுரியமாக ஏற்கனவே பெற்றிருந்த காரணத்தால் அவனால் வைத்தியரை விட அதிக வாடிக்கையாளரைப் பெற முடிந்திருந்தது. பல மருந்து நிறுவனங்கள் மருமகனின் இடத்துக்கும் மருந்துகளை எந்தப் பாரபட்சமும் இல்லாமல் வாரி வழங்கியிருந்தன. ஏதோ நல்ல காலத்துக்கு அந்தப் பிரிவின் அரச கால்நடை வைத்தியர் துணிந்து மருந்து நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முனைந்த




தாலும் காவல் துறையில் முறைப்பாடு செய்ததாலும் மருமகனின் கடையை மூடச் செய்தார். எனினும் அவனின் தொலை பேசித் தொடர்பு வாடிக்கையாளரை நிறுத்த முடியவில்லை.

உண்மையில் இது நடந்து இன்றைக்கு 8 வருடங்கள் ஆகின்றன. இன்று வரை மருமகன் தன்னை கால்நடை வைத்திய ராக பாவனை காட்டி சிகிச்சை செய்து வருகின்றான். குறிப்பாக வவுனியாவின் புறநகர் மற்றும் வவுனியா வடக்கு, ஒட்டுசுட்டான் பகுதியில் அவன் ஒரு பிரபல வைத்தியர். அடிக்கடி அவன் சிகிச்சை செய்த விலங்குகள் எங்களிடம் இறுதி நிலையில் வரும். பல வருடங்களாக அவன் வீடுகளுக்குச் சென்று அந்த நாய்களுக்கு சிகிச்சையளித்திருப்பான். பெரும்பாலும் தடுப்பூசிகள், சிறிய தோல்சிகிச்சைகள், கடுமையான நோய் எனில் வரமாட்டார். இதோ வருகிறேன் அதோ வருகிறேன் என போக்குக் காட்டுவான். ஆனால் வேறு வைத்தியரிடம் போக விடமாட்டான். சென் றால் தான் சிகிச்சை செய்வது தெரிந்து விடும் என்பதால்.

அது இது என்று சில மருந்துகளை சொல்லி விடுவான். தப்பினால் தப்பட்டும் என்றவகையில். கடைசியில் விலங்குக ளின் உயிர்தான் சவாலுக்கு உள்ளாகும். அண்மையில் கடுமையான உண்ணிக் காய்ச்சலால் (Tick fever) பாதிக்கப்பட்ட நாயொன்றை இறுதி நேர சிகிச்சைக்கு கொண்டு வரும்போது மூன்று நான்கு வருடங்களாக அவன் தடுப்பூசி போடுவது தெரிந்தது. நாய் சாப்பிடவில்லை என்பதை சொல்லி ஆறேழு நாள் கடந்தும் அவன் வரவில்லை. கடைசிக் கட்டம் அதாவது நாயின் உடலின் சகல பகுதிகளும் மஞ்சள் காமாலை நோய் வந்து மஞ்சளாகியே (jaundice) கொண்டு வந்தனர். சிகிச்சை யளிப்பவன் வைத்தியரென என அறி யாமலேயே அவனிடம் தமது செல்லப் பிராணிகளைக் கொடுத்து வந்த துர்பாக்கி யம் மிக்கவர்களாக இருந்தனர். சரியான நேரத்துக்கு வந்திருந்தால் காப்பாற்றியி ருக்க முடியும்.

இன்னொரு கதை. கால்நடை வைத்தியர் வெளிநாடு சென்று விட்டார். அவரது சிகிச்சை நிலையத்துக்கு வேறு வைத்தி யர்களை நியமித்திருந்தார். காலம் செல்ல செல்ல அந்த வைத்தியர்கள் விலக வேறு வைத்தியர்கள் கிடைக்காத காரணத்தால் வேலை செய்யும் வேலையாட்களை வைத்து சிகிச்சை நிலையத்தை நடத்தத் தொடங்கினார். அவர் அதிலும் ஒரு விசேட தந்திரத்தை பாவித்தார். தமிழ் வாடிக் கையாளருக்கு சிங்கள வேலையாட்களை யும் சிங்கள வாடிக்கையாளருக்கு தமிழ் வேலையாட்களையும் வைத்து சமாளிப் பார்.

இதனை இலகுவில் யாரும் கண்டு பிடிக்க முடியாது. யாராவது வைத்தியர் இல்லையா என கேட்டால் செயலமர்வுக்கு கொழும்பு போய்விட்டார் கண்டி போய் விட்டார் எனக் கதை விடுவார். அவரது கதைகளை நம்பும் வாடிக்கையாளரை நினைத்து எனக்கு ஆச்சரியமே ஏற்படும். அந்த கால்நடை வைத்தியர் வெளிநாடு போய் 5 வருடங்கள் வரை ஆகிவிட்டன. அவர் இன்னும் இங்குதான் இருப்பதாக நம்பும் வாடிக்கையாளர்கள் பலர் உள்ள னர். viber போன்ற செயலிகள் மூலம் கதைத்து சமாளித்து விடுவார். வருடத்தில் சில வாரங்கள் நாட்டுக்கு வந்து வாடிக் கையாளரிடம் தன் இருப்பை உணர்த்து வார். மற்றப்படி சிகிச்சைகள் எல்லாம் ஊழி யர்கள்தான்.



இப்படி பல கால்நடைச் சிகிச்சை நிலை யங்களில் வைத்தியரல்லாத பலர் சிகிச்சை யளிக்கின்றனர். இதற்கு அந்தந்த கால் நடை வைத்தியர்கள் தான் பொறுப்பு. அவர்கள் சரியாக செயற்பட்டிருந்தால் இந்த சட்டவிரோத சிகிச்சையை குறைத்திருக்க முடியும். வெறுமனே தமக்கு வருமானம் வந்தால் சரி எனும் மனநிலை. பல மருத் துவ ஆலோசனைகளை வழங்குவார் கள். இந்த மாதிரியான போலி நபர்களை இலங்கை முழுவதும் காண முடியும். பலர் மேற்படி சிகிச்சை நிலையங்களில் பணி புரியும் ஊழியர்களாக இருப்பார்கள். பலர் அரச கால்நடை வைத்திய அலுவலக சிற்றூழியராக இருப்பார்கள். பலர் செயற்கை முறை சினைப்படுத்துனர்களாக இருப்பார்கள். சுகாதாரத் திணைக்கள நாய்த் தடுப்பூசிக் காரர்களாக இருப்பார்கள். மருந்துகளை விற்கும் பண்ணைக் கடைக்காரர்களாக இருப்பார்கள். சிலர் கால்நடைப் பண்ணை யாளராக இருப்பார்கள்.

கால்நடைகளை வளர்ப்பவர்கள் அறியாத வகையில் நூதன மருத்துவ மோசடிக்காரர்கள் இவர்கள். பல இடங்களில் சிகிச்சை செய்து கையும் மெய்யுமாக பிடிபடும் இந்தமாதிரியான சிகிச்சைக் காரர்களை விலங்குகளின் உரிமையாளர் கள் பாவப்பட்டுக் காப்பாற்றி விடுகிறார்கள். உண்மையில் இங்கு விலங்கு உரிமை யாளர்களுக்கு முக்கிய பொறுப்பு உள்ளது. உங்கள் விலங்குகளுக்குச் சிகிச்சையளிக் கும் மருந்து தரும் நபர் கால்நடை வைத் தியரா என அறிய வேண்டும். தரும் மருந் துகள் எவ்வாறானவை? எனவும் அவற் றின் பக்க விளைவுகளை அறியவேண்டும். சிலவேளை போலி வைத்தியர் எனவும்




அறிந்தால் அவரை அழைப்பதை தவிர்க்க வேண்டும். சட்ட நடவடிக்கை எடுக்க உதவ வேண்டும். இலங்கையில் கால் நடை மருத்துவச் சிகிச்சைத் தொடர்பாக பல சட்டங்கள் உள்ளன.

மேலும், பல சட்ட விரோத சிகிச்சையாள ருக்கு மருந்துகளை வழங்கும் பல மருந் துக் கம்பனிகள் இன்னுமொரு முக்கிய குற்றவாளிகள். யார் எவரென்று பாராமல் மருந்துகளை வழங்குவது. வெறும் விற் பனை இலக்கு. வருமானம். அவ்வளவு தான். சில வேளைகளில் ஆடு ,மாடு, போன்ற உற்பத்தி விலங்குகளுக்கு வழங் கும் சக்தி மிக்க நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் மனித சுகாதாரத்தையே பாதிக்க வல்லன. இன்று உலகில் பல உயிரிழப்புகளுக்கு நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு நிலை காரணமாக அமைகிறது. கால்நடை வளர்ப்பில் தேவையற்று பாவிக் கப்படும் நுண்ணுயிர் கொல்லிகள் இந்த நிலைக்கு முக்கிய காரணம். மனித மற்றும் விலங்குகளுக்கு பொதுவான பல நுண்ணு யிர் கொல்லிகள் கால்நடை மருந்தகங்கள், போலி சிகிச்சையாளர்கள், பண்ணைக் கடைகள் போன்றவற்றால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை பலர் அறிவதில்லை. இது தொடர்பாக தொடர்ச்சியான வாரங்களில் பேசுவோம்.




வேதநாயகம்
தபேந்திரன்

பரம்பரைப் பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீட்ட நல்லதொரு பொருளாதார முறையைச் சூதாட்டமாக்கி நாசமாக்கி விட்டார்கள். எமது இலங்கைத் திருநாட்டில் மிகுதியாக உள்ள வறிய நிலையிலுள்ளோரை நிமிர்த்தப் பொருத்தமான பணச் சேமிப்பு முறைகள் தேவையானவை.

# சேமிப்பு முறையில் காணாமல் போன..

1980 களின் ஆரம்பத்தில் போர் தீவிரம் பெறத் தொடங்கிய காலத்தில் வளர்ந்த நாடுகளை நோக்கிப் புலம் பெயர்வுகள் ஆரம்பித்தன.

யாழ்ப்பாணச் சமூகம் தான் பெருமளவில் புலம்பெயர ஆரம்பித்தது.

முதலில் சின்ன நாடு ஒன்றுக்குப் போவோம். பின்னர் அங்கு உழைத்துக் காசு சேர்த்த பின் பெரிய நாட்டுக்குப் போவோம் என்ற வகையிலான புலம் பெயர்வும் இருந்தது.

அரபுநாடுகள் என்றும் மத்திய கிழக்கு நாடுகள் என்றும் அழைப்பவை சின்ன நாடுகளாகும்.

மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியாக் கண்ட நாடுகள் பெரிய நாடுகளாகும். அவற்றை வளர்ந்த நாடுகள் என்றார்கள்.

அப்போது வளர்ந்த நாடுகளை நோக்கிப் புலம் பெயர்வதற்கு பல்லாயிரம் ரூபாக்களைப் பயண முகவரிடம் செலுத்த வேண்டும். பின்னாளில் இது ஓரிரு இலட்சமாகி பல இலட்சமாகியது வேறு கதை.

நில உடைமை, பரம்பரைப் பண உடைமை படைத்த குடும்பங்களுக்கு இது இயலுமானதாக இருந்தது.

நில உடைமையற்ற பரம்பரை வசதியற்ற மக்களுக்கு பணவரவு (பணச்சடங்கு), அற்ஹோம் முறைமை தான் பணத்தைத் திரட்ட உதவியது.

பொருளாதாரத்தில் பின் தங்கியிருந்த மக்கள் முதலில் கூட்டல் விருத்தித் தொடரில் புலம்பெயர ஆரம்பித்தார்கள்.

பின்னர் அது பெருக்கல் விருத்தித் தொடராக மாறியது. கிடைத்த வாய்ப்பை விடக் கூடாதெனத் தீவிரமாக உழைத்தார்கள். ஊருக்குப் பணம் அனுப்பினார்கள்.

அந்தப் போருக்குள்ளும் கிடைத்த இடைவெளிகளில் குடிசைகள் நல்ல கல்வீடுகளாக மாறின. மாடி மனைகள் கூட எழுந்தன.

மூலதனத் திரட்சி தான் பொருளாதார வளர்ச்சியின் அடித்தளம் எனப் பொருளாதாரக் கோட்பாடு கூறுகிறது.

புலம் பெயர்வுக்கும் பணச் செழிப்புக்கும் பணவரவு, அற்ஹோம் முறைகள் மூலதனத் தேட்டத்துக்கு உதவின.

1930 களில் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பிரதேசத்தின் அல்வாய்க் கிராமத்தில் உருவான பணவரவு முறைமை பரம்பரைப் பணக்காரக் குடும்பங்களைப் பின்தள்ளிப் பல்லாயிரம் புதிய பணக்காரத் தலைமுறைகளை உருவாக்கியது.

மிகச்சிறந்ததொரு இச்சேமிப்பு முறைமை இந் நாளில் இல்லையெனும் நிலைக்கு வந்து விட்டது.

சிக்கனம், சேமிப்பு, சிறுமுதலீடு, பெரும் பணம் என்ற வாழ்க்கை வட்டத்தில் பங்கெடுத்த இப் பொருளாதாரப் பண்பாட்டு முறையின் வீழ்ச்சிக்கு இரு பிரதான காரணங்களைக் கூறலாம்.

01. சேமிப்பு என்ற முறையிலிருந்து சூதாட்டம் என்ற நிலையை அடைந்தமை.

02. பணச் செழிப்புப் போதுமான அளவில் வந்துள்ளமையால் இம் முறை தேவையில்லை என்ற மனநிலை.

முதலாவது விடயத்தைப் பார்ப்போம்.

சேமிப்பு என்ற முறையிலிருந்து சூதாட்டம் என்ற நிலையை அடைந்தமை. முன்னாளில் பணவரவு நிகழ்வின் போது ஒருவர் 100 ரூபாப் பணத்தைத் தனது பெயரில் பதிவு செய்தால் பணம் வாங்கியவர் பணத்தைத் தந்தவரது வீட்டில் பணவரவு நிகழும் போது 100 ரூபா பழையது, 100 ரூபா புதியது எனக் காசை இரட்டிப்பாக வழங்கினால் போதுமானது.

அல்லது பணவரவு எனும் முறையிலிருந்து விலக விரும்பினால் 100 ரூபா பழையதுடன் 10 ரூபா வட்டி சேர்த்து 110 ரூபா கொடுத்தால் போதுமானது.

இந்தப் பொருளாதார முறைமை அதாவது 100 ரூபா பின்னாளில் 1000 ரூபா அல்லது 2000 ரூபா என்ற தொகை உழைத்துச் செலுத்தக் கூடிய இயலுமை உள்ள தொகையாக இருந்தது. இது மிகவும் ஆரோக்கியமான ஒரு பொருளாதாரச் சுற்றோட்டத்திற்கு வழி வகுத்தது.

2000 ஆம் ஆண்டுகள் காலப்பகுதியிலும் அதற்குப் பின்னரும் இந்தத் தொகை 25000 ரூபா புதியது 25000 ரூபா பழையது. 50 000 ரூபா பழையது, 50000 ரூபா புதியது எனச் சூதாட்டத் தொகையாக மாறியது.

அடுத்த வருடம் பணவரவு நிகழ்வை நடத்த உள்ளவர் இந்த வருடம் பெரிய தொகையைப் புதியது எனக் கொடுத்துப் பதிவு செய்தார்.

பணத்தைப் பெற்றவர் இரட்டிப்புத் தொகையைச் செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகினார். உழைத்துக் கொடுக்க முடியாது கடன்பட்டுப் பணத்தைச் செலுத்தும் நிலை உருவானது.

பரம்பரைப் பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீட்ட நல்லதொரு பொருளாதார முறையைச் சூதாட்டமாக்கி நாசமாக்கி விட்டார்கள்.

எமது இலங்கைத் திருநாட்டில் மிகுதியாக உள்ள வறிய நிலையிலுள்ளோரை நிமிர்த்தப் பொருத்தமான பணச் சேமிப்பு முறைகள் தேவையானவை.

# தள்ளிப் போடும் பழக்கத்தைத் தகர்க்க 8 விதமான உத்திகள்



சி.இராம்குமார்

> “ஏன் இந்த வேலை தள்ளிப் போகிறது?” என்று உங்களிடம் யாராவது கேட்கும் போதெல்லாம், நீங்கள் பொதுவாகச் சொல்கிற பதில், “நேரமில்லை சார்” என்பதுதான். இந்தப் பதிலுக்கு ஒரே விடை, நீங்களே புதிதாக நேரத்தை உருவாக்குவது தான்.

உலகில் எந்தத் துறையிலாவது உச்ச நிலையை அடைய வேண்டும் என்றால், அதற்கு எதையும் உடனடியாகச் செய்யும் குணாதிசயம் வேண்டும். தள்ளிப் போட்டுக் கொண்டே செல்பவர்கள் பெரிதாக எதையும் சாதிப்பதில்லை. இந்தப் பழக்கத்தைத் தகர்த்தெறிய, கனடா - அமெரிக்க எழுத்தாளர் பிரையன் டிரேசி (Brain Tracy) சொல்லும் 8 உத்திகள் இதோ..

1. பட்டியலிடுங்கள் நீங்கள் தொடர்ந்து பல விஷயங்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே இருந்திருப்பீர்கள் அல்லவா? அவற்றில் எதை உடனடியாக முடிக்க விரும்புகிறீர்கள் என்று பட்டியலிடுங்கள். உங்களுக்கு எது அதிக அளவு வருமானத்தைத் தருமோ, எது உங்களுக்கு நற்பெயரைப் பெற்றுத் தருமோ அதன் அடிப்படையில் அந்தப் பட்டியல் இருக்கலாம்.

2. வரிசைப் படுத்துங்கள் இப்போது உங்கள் பட்டியலில் 10 விஷயங்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இவற்றை ‘அவசரம்‘ மற்றும் ‘முக்கியம்’ ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றிலிருந்து பத்து வரை வரிசைப்படுத்துங்கள்.

3. ஒன்றை மட்டும் தொடங்குங்கள் உங்களுடைய பட்டியலில் முதல் இடத்தில் உள்ள வேலையை மட்டும் உடனே செய்யத் தொடங்குங்கள். “ஒன்றே செய், நன்றே செய், இன்றே செய்“ என்ற பழமொழிக்கேற்ப ஒன்றில் இருந்து தொடங்குங்கள். ஒன்றை மட்டும் தொடங்குங்கள். ஒன்றில் மட்டுமே 100 சதவீத கவனத்தையும் செலுத்துங்கள்.

4. சிறிது, சிறிதாகப் பிரித்துச் செய்யுங்கள் ஒரு வேலையை முழுமையாக முடிக்க வேண்டும் என்றால், சற்று மலைப்பாகத்தான் இருக்கும். அவற்றை நான்கு அல்லது ஆறு அல்லது எட்டு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, ஒன்றன்பின் ஒன்றாக அந்த வேலைகளை முடிக்கத் தொடங்கலாம்.

5. பிரித்துக் கொடுங்கள் சிறிது - சிறிதாகப் பிரித்துக் கொண்ட வேலைகளை நீங்களே செய்தாக வேண்டும் என்கிற அவசியம் இல்லை. உங்கள் நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ, உங்களுக்குக் கீழ் பணியாற்றுபவர்களிடமோ அந்த வேலைகளில் சில பகுதிகளைப் பிரித்துக் கொடுக்கலாம். அப்படி கொடுத்த வேலைகளை, அவர்கள் முடிக்கும் வரை, அவர்களைப் பின் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

6. அவசரம் காட்டுங்கள் குக்கரில் பிரஷர் இருந்தால்தான், அரிசி வேகும். அதுபோல் எந்த வேலையையும் “அவசரம்“ என்று மனதில் எண்ணினால் தான், அது உடனடியாக நடக்கும். எனவே, இன்றைக்கு மாலை 5 மணிக்குள் இந்த வேலையை முடித்து விட வேண்டும் என்று ஒரு சுய இலக்கை நிர்ணயித்துக் கொண்டு, உங்களை நீங்களே உந்தித் தள்ளி அந்த வேலையை முடிக்க முயற்சி செய்யுங்கள்.

7. நேரத்தை உருவாக்குங்கள் ”ஏன் இந்த வேலை தள்ளிப் போகிறது ?” என்று உங்களிடம் யாராவது கேட்கும் போதெல்லாம், நீங்கள் பொதுவாக சொல்கிற பதில், “நேரமில்லை சார்“ என்பதுதான். இந்த பதிலுக்கு ஒரே விடை, நீங்களே புதிதாக நேரத்தை உருவாக்குவது தான்.

அதாவது, எடுத்த காரியம் முடியும் வரை அதிகாலையில் 4 மணிக்கு எழுந்திருக்கப் பழகுங்கள். இல்லையேல் இரவு 12 மணி வரை முழித்திருந்து அன்றைய இலக்கை நிறைவு செய்யுங்கள்.

8. எல்லாத் தொடர்புகளையும் பயன்படுத்துங்கள் திட்டமிட்ட வேலையை முடிக்க, அதற்கு வேறு யாருடைய உதவி தேவைப்பட்டாலும், வெட்கப்படாமல் அவர்களைத் தொடர்பு கொண்டு அந்த உதவியைப் பெறுங்கள். எல்லாத் தொடர்புகளையும் நாம் உருவாக்கியதற்குக் காரணமே, தேவைப்படும் நேரத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்வதற்குத்தான்.

இந்த எட்டு உத்திகளையும் பயன்படுத்தி நீண்ட நாட்களாகத் தள்ளிப் போட்டுக் கொண்டிருந்த ஒரு வேலையை நீங்கள் முடித்து விட்டீர்களேயானால், அதன் பிறகு உங்களுடைய தன்னம்பிக்கை அதிகரிக்கத் தொடங்கும். அதுவே உங்கள் வெற்றியின் தொடக்க வாசல்!

# எங்கட ஆச்சி

## - காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -





எங்கட வாரிவளவுப் பிள்ளையார் கோயில்லை திருவிழாக்காலம் பத்து நாளும் தவறாம மடத்தில மாகேசுரபூசை எண்ட அன்னதானம் நடந்தது. மத்தியானத்தில சோறும் இரவில புட்டு றொட்டி எண்டு பலகாரங்களும் கோயிலுக்குப் போன ஆக்களுக்கும் போகாத ஆக்களுக்கும் எண்டு குடுத்தவை. வீட்டம்மா ஒவ்வொரு நாளும் பகல் இரவுத்திருவிழாத் தவற விடமாட்டா. என்னப்பா ஏன் இப்பிடி எண்டால் உங்களுக்கு அறிவில்லை எண்டு கோத்தை சொல்லுறது உண்மைதான் எண்டா. பின்ன என்ன விசர்க்கதை கதைக்கிறியள். உங்க காஸ் கிடையாது .இனி விறகடுப்புக்கை தவண்டுகிடந்து மூஞ்சையைக் குடுத்து அடுப்பு மூட்ட ஆரால ஏலும். சாமான் சக்கட்டுகளும் கடும்விலை. கோயிலுக்குப்போனா மத்தியானம் இரவு ரெண்டு நேரமும் சாப்பாட்டைக் கவர் பண்ணலாம் காசும் மிச்சம் வேலையும் மிச்சம் எண்டு என்னையும் பெடி பெட்டையளையும் இழுத்துக்கொண்டு போடுவா.

எங்கட கோயில்களிலை அன்னதானம் முக்கியமான ஒண்டா இருக்குது. அதுக்கு ஆன்மீக சமூக பொருளாதாரக் காரணங்கள் நிறைய இருக்குது எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுறவ. சிவபெருமானை மகேஸ்வரன் எண்டுவம். மகேஸ்வரன் எண்டால் மகா அண்டங்களை உடையவன் எண்டு பொருள் எண்டுவா ஆச்சி. அந்த மகேஸ்வரனோ தொண்டர்களின் உள்ளத்தில் ஒடுக்கம் எண்டு ஔவையார் சொல்லுறா. இப்பிடி மகேஸ்வரன் உறைகின்ற உள்ளம் உள்ளவர்களை மாகேசுரர் எண்டுவினம். இப்பிடிக்கொத்த ஆக்களை இப்ப காணுறது வலு கஷ்டம், பூசை செய்யிறவன் , பிரசங்கம் செய்யிறவன், கோயில் மணியகாரன் எண்டு பெரும்பாலான ஆக்கள் எவன்ரை உள்ளத்திலையும் இப்ப மகேஸ்வரன் இருக்கிற மாதிரித் தெரியேல்லை எல்லாற்றை உள்ளத்திலையும் காசுப் பேய்தான் இருக்குது எண்டு முந்தி ஒருக்கா அப்பு சொன்ன ஞாபகம்.

அது கிடக்கட்டும் அந்த மாகேசுரர்களுக்கு அவர்களின் ரிசிமூலம் நதிமூலம் சமூக நிலைகளைப் பாராமல் உணவு குடுக்க வேணும் எண்டது எங்கட ஆன்மீக விளக்கம். இறைவன் ஒவ்வொருவரிலும் இருக்கிறான் ஆகவே அவர்களுக்கு உணவு குடுப்பது இறைவனுக்கு உணவு குடுப்பது போன்றது எண்டு எங்கட ஆன்மீகம் சொல்கிறது. இதனால பல ஏழையளும் அவையின்ரை குடும்பங்களும் பசியாறும். இந்த மாகேசுர பூசைக்கு இயலுமான ஒவ்வொருவரும் பங்களிப்பினம். அப்பிடிச் செய்யிறதால இறைவன்ரை பெயரால அடியவர்களுக்கும் ஏழைகளுக்கும் சாப்பாடு குடுப்பினம். அதோட ஊரே கூடி இருந்து சமைப்பினம். சாப்பிடுகிற பந்தியிலையும் எந்தவித ஏற்றத்தாழ்வுகளும் இல்லாமல் எல்லாரும் ஒண்டா இருந்து சாப்பிடுவினம். இப்பிடி பங்களிக்கிறதாலையும் ஒண்டா இருந்து சாப்பிடுறதாலையும் சமூக ஒற்றுமை வளரும் எண்டுவார் அப்பு.

இதைவிட முக்கியமான இன்னொரு காரணமும் இந்த அன்னதானத்துக்குப்பின்னால இருக்குது. அது என்னண்டால் எங்கட பழைய சமூகம் உழைப்பாளர் சமூகம். கோயில் திருவிழாக் கொண்டாடினால் உழைக்க முடியாது. உழைக்காவிட்டால் சாப்பிட முடியாது. அதால அன்ன தானம் இருந்தால் அவை உழைக்கப் போகவேண்டிய தேவை இல்லாமல் ஆன்மீக வேலைகளிலை ஈடுபடுவினம். அப்ப அவை எல்லாரும் திருவிழாக்களிலை பங்குபற்றுவினம்.அதோட பசி வந்தாப்பறக்கிற பத்தில கடவுள் சிந்தனையும் ஒண்டெண்டுவார் அப்பு. அப்ப எல்லாற்றையும் பசியைத்தீர்க்கிற வேலையை அன்னதானம் செய்யுது எண்டுவார்.

தனிய ஆக்களின்ரை பசிமட்டும் எண்டில்லை அன்னதானத்தில மிஞ்சிற சாப்பாட்டால காகம், குருவி, மாடு, ஆடு, நாய், பூனை, எறும்பு , புழு, பூச்சியெண்டு எல்லாத்தின்ரை பசியும் போகும் எண்டுவா ஆச்சி. பசியால கஸ்ரப்படுகிற ஒருத்தனுக்கு சாப்பாடு போடுகிறது பெரிய புண்ணியம் எண்டுவா. அன்னதானக் கந்தன் எண்டிற செல்வச்சந்நிதி முருகனைப் பாக்கப் போனா வயிறாறப் பசியாறுகிற கைவிடப்பட்ட பல வயசுபோனவை, ஏலாதவை வருத்தக்காறர் எண்டு ஒரு பெரிய மாகேசுர கூட்டத்தைக் காணலாம்.

உப்பிடி இருக்கிற கன வயது போனதுகள் எல்லாம் தங்கட காலத்திலை நல்லா இருந்து சீவிச்சுப்போட்டு இப்ப வயது போன காலத்திலை பிள்ளை குட்டியள் கைவிட்டதாலைதான் இப்பிடி வந்து இஞ்சை கோயிலை இருக்குதுகள் எண்டு அங்கை நிண்ட ஒருத்தர் சொன்னவர் . உண்ணான கோயில் வழியை தேவையில்லாத ஆடம்பரமாத் திருவிழாக்கள் செய்யிறதுக்கு எண்டு போட்டி போட்டு கண்டபடி இலச்சக்கணக்கிலை சிலவு செய்யிற காசை வைச்சுக் கடவுளின்ரை பெயராலை அந்த அந்தக் கோயில்களிலை வரியம் முழுக்க இல்லாததுகள் செல்லாததுகள் எல்லாத்துக்கும் சாப்பாடு போடலாம் எண்டுவா எங்கடை ஆச்சி.